
# தகைசால் நூலகர்

## நூலகவியலாளர் என்.செல்வராஜா
## சேவை நயப்பு மலர்



குமரன் புத்தக இல்லம்

# தகைசால் நூலகர்

நூலகவியலாளர் என்.செல்வராஜா
சேவை நயப்பு மலர்

# தகைசால் நூலகர்

## நூலகவியலாளர் என்.செல்வராஜா
## சேவை நயப்பு மலர்

தொகுப்பும் பதிப்பும் க. குமரன்

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2024

தகைசால் நூலகர்
(நூலகவியலாளர் என். செல்வராஜா சேவை நயப்பு மலர்)

தொகுப்பு : க. குமரன்

பதிப்பு : 2024

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: books@kumarangroup.net
இல.14, அண்ணா 2ஆம் தெரு. தேரோடும் வீதி, திருவேற்காடு, சென்னை - 600077
தொ.பே:+91 94 4480 8941

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Thakaisaal Noolakar
(Noolakaviyalaalar N. Selvarajah Felicitation Volume)

Complied by : G. Kumaran

Edition : 2024

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo - 6, Tel. - 0112 364550, E.mail : books@kumarangroup.net
No.14, Anna 2nd Street, Therodum Veethi, Thiruverkadu, Chennai - 600077
Tel : +91 94 4480 8941, E-mail: kumaranbookhouse@yahoo.com

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 6

*வெளியீட்டு எண்:* #1055

ISBN 978-955-624-6164-95-9

# பதிப்புரை

இலங்கைத் தமிழ் நூல் வரலாற்றில் மிக முக்கிய முதல்நிலை ஆளுமையாகத் திகழ்பவர் திரு. என். செல்வராஜா அவர்கள். அவர் ஈழத்துத் தமிழ் நூல் உலகின் அனைத்து கட்டங்களிலும் சம்பந்தப்பட்டவர். அவை தொடர்பான ஆழ்ந்த அறிவினைக் கொண்டவர். அவற்றின் வளர்ச்சி தொடர்பான திட்டங்களை கொண்டவர். இவை தொடர்பாக ஏனையோரையும் உற்சாகப்படுத்துபவர். இலங்கைத் தமிழ் நூல் சூழலில் இத்தகைய ஆளுமையுடைய வேறு எவரும் அண்மைக்காலங்களில் இருந்ததில்லை.

நாட்டில் இருந்த போதும், புலம்பெயர்ந்த பின்னரும் இலங்கைத் தமிழரின் ஆவணங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் முயற்சியில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாகப் பணியாற்றி வரும் இப் பேராற்றல் மிக்க ஆளுமையின் 70ஆவது அகவைப் பூர்த்தியைச் சிறப்பிக்கும் நோக்கில் இத்தொகுப்பு நூல் வெளிவருகின்றது.

அவர் ஈழத்து நூல் உலகுக்கு வழங்கிய சேவையினை நினைவு கூர்ந்தும், நயந்தும் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட இத் தொகுப்பினை வெளியிடுவதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

*க. குமரன்*

# பொருளடக்கம்

*பதிப்புரை* v

1. நடமாடும் நூலகத்திற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள் 1
   - B.H. அப்துல் ஹமீத்

2. ஈழத்து நூலகவியலின் தந்தை 3
   - கலாபூசணம் நடராஜா அனந்தராஜ்

3. ஆழ்ந்த மொழிப்பற்றும் இலக்கிய ஆர்வமும் சமுதாயப் பற்றும் நிறைந்தவர் 8
   - அன்னலட்சுமி இராஜதுரை

4. நூல் தேட்டத் தொகுப்புகள்: அர்ப்பணிப்புடன் கூடிய ஆரோக்கியப் பங்களிப்பு! 10
   - வ.ந.கிரிதரன்

5. தனக்கென வாழாத் தகைசால் பெரியார் 13
   - சந்திரகௌரி சிவபாலன்

6. பத்திரிகைகள், நூல்கள் தொடர்பில் ஆழமான ஈடுபாட்டைக் கொண்டவர் 16
   - எஸ்.கே.காசிலிங்கம்

7. இளைஞரின் துடிப்புடன் இயங்குபவர் 20
   - கோவிலூர் செல்வராஜன்

8. வயதில் எழுபதையும் எழுத்தில் ஐம்பதையும் தொடும் பேனாப் போராளி... 22
   - வைரமுத்து சிவராசா

9. புலம்பெயர் தமிழ்நூல் வரலாற்றில்
அழியாத மைற்கல்லை ஏற்படுத்தியவர் 25
- சு.பாக்கியநாதன் & விக்னா பாக்கியநாதன்

10. அருமையான நூலகப்பணி செய்கின்ற வல்லுனர்! 27
- நல்லையா சண்முகப்பிரபு

11. உங்கள் அயர்வறியா தேடல்
இனிவரும் தலைமுறைக்கும் வழிகாட்டும் 28
- கனகசபாபதி சரவணபவன்

12. உள்ளக் கமலம் நிறைந்த மனிதர் 30
- சிவ.சந்திரகாந்தன்

13. சிறந்த தமிழ்ப் புலமை உடையவர்;
சுவைபட எழுதுவதில் வல்லவர் 36
- M.T. செல்வராஜா

14. உலகத்தமிழர்களின் அரும் பொக்கிஷம் 38
- வவுனியூர் இரா உதயணன்

15. மட்டக்களப்புப் பொதுநூலக விருத்தியில்
நூலகர் என் செல்வராஜா 40
- கலாநிதி சு.சிவரெத்தினம்

16. சமகாலத்தில் வாழும் நம்பியாண்டார் நம்பி 46
- மு.க.சு.சிவகுமாரன்

17. தமிழ்மொழிக்கும் தமிழினத்துக்கும்
கிடைத்த பெரும்கொடை 48
- பொ.சிறீஜீவகன்

18. மேலும் அறவழிச்சேவை தொடரட்டும் 50
- சிவஞானம் சதானந்தன், மகாலிங்கம் கணேசு

19. ஈழத்து எழுத்தாளர்களை உலகெங்கும் அறிமுகம் செய்தவர் — 52
- இரா.சிறிதரன்

20. எழுத்துப் பணி, நூலகப் பணி தொடரவேண்டும் — 54
- எஸ்.ஸ்ரீ கஜன்

21. நூல்களுடன் வாழ்ந்து வரும் நூலகவியலாளர் — 56
- எஸ்.கே.ராஜென்

22. நூல்தேடும் நூலகன் — 61
- ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

23. எனக்குள் எழுந்த எண்ணங்களின் செல்திசையை சீரமைத்த நூலியலாளர் — 63
- குலசிங்கம் வசீகரன்

24. என்.செல்வராஜாவின் பெருமனதை பெருமைசெய்ய விரும்பும் வாழ்த்து இது — 66
- வெற்றிச்செல்வி

25. ஈழத்தமிழ் சமூகத்தின் சிறந்த மற்றும் ஒரே ஒரு நூலகவியலாளர் — 69
- ச.சத்யதேவன்

26. நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் நூலகம் சார்ந்த பெரும்பணிகளில் சில — 74
- திருமதி எஸ்.ஜெயலஷ்மி

27. நூல்தேட்டம் நற்பணி தொடர வாழ்த்துகள் — 79
- க. பாலேந்திரா



# நடமாடும் நூலகத்திற்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள்

அன்று... நாம் வானொலியில் பணியாற்றிய காலத்தில், எங்களது தேடலுக்கு உரிய களமாக கொழும்பில் பொதுநூலகம் மட்டுமே இருந்தது. அங்கு எந்த நூல் எங்கே இருக்கும் என வழிகாட்டும் கலங்கரை விளக்காக நூலகர் ஒருவர் இருந்தார்.

இன்று... உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் தமிழருக்கும் நூல்கள் தொடர்பான தேடல்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் தொண்டாற்றிக் கொண்டிருப்பவர், திரு. என். செல்வராஜா அவர்கள்.

48 ஆண்டுகளுக்கும் மேலாக, நூலக சேவைக்கே தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றி வரும் திரு.செல்வராஜா அவர்கள் தனது 70ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார் என அறிகிறோம்.

தமிழ் மொழியூடாக 'நூலகவியல் கல்வி' கற்க ஆரம்பித்த முன்னோடிகளுள் ஒருவர். 1976ஆம் ஆண்டு முதல், தாயகத்தில் இரண்டு தசாப்தங்களும், புலம் பெயர்ந்து வாழும் ஐக்கிய இராச்சியத்தில் மூன்று தசாப்தங்களாகவும் நூலகச் சேவையில் அவரது தொண்டு, தொடர்வது, ஒரு சாதனைச் சரித்திரம்.

தாயகத்தில் வாழ்ந்திருந்த காலத்தில், வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் இடமெங்கும் இவரது தொண்டு பரந்து விரிந்திருந்தது.

இலங்கைத் தமிழர்களது தொன்மைச் சான்றுகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த யாழ் நூலகம் 1981 மே 31 அன்று இரவு தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், ஆங்காங்கே தனிப்பட்டவர்கள் சேகரித்து வைத்திருந்த நூல்கள் யாழ் மண்ணுக்கு கொண்டு வரப்பட்டு சிறிய அளவில் நூலகமாகக் களஞ்சியமாக்கப்பட்டபோதும், நெருக்கடியான காலங்களிலும் அங்கு இவரது பணி இன்றியமையாததாய் அமைந்தது.

போர்ச் சூழல் தீவிரமடைந்த பின்னர் புலம்பெயர்ந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். பொதுவாகவே நம்மவரில் பலர் புலம்பெயர்ந்த பின்னர் தாயகத்தில் ஆற்றிய பணிக்குச் சற்றும் தொடர்பில்லாத துறைகளுக்கு மாறும் சூழ்நிலை ஏற்படும். ஆனால் திரு. செல்வராஜா அவர்களோ புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலும் தலைநிமிர்ந்து வாழ்ந்துகொண்டே, தனது ஆன்மாவுக்கு நிறைவு தரும் நூலகசேவையை விஞ்ஞானத் தேரிலேறித் தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருக்கிறார். இன்றைய தலைமுறை மட்டுமல்ல, வருங்காலத் தலைமுறையும் இவரது தொண்டுக்காக நன்றியுணர்வுடன் இவரை வாழ்த்தும்.

இன்னும் பல அகவைகள் கடந்தும் அவரது தொண்டு தொடர, நம் எல்லோருக்கும் பொதுவான ஏக இறை, அவருக்கு நல் ஆரோக்கியத்தையும் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வையும் தந்தருள' அடியேனும் இதயத்தால் வேண்டி வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க வளத்துடன்

அன்புடன்
B.H. **அப்துல் ஹமீத்**

# ஈழத்து நூலகவியலின் தந்தை



ஈழத்தின் ஆனைக்கோட்டையில் 1954ஆம் ஆண்டில் பிறந்து 2024ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் 70ஆவது அகவையில் கால்பதிக்கும் ஈழத்தின் புகழ்பூத்த நூலகவியலாளர் நடராஜா செல்வராஜா அவர்களின் நூல்களின் ஆவணப்படுத்தல் முயற்சியானது இதுவரை வேறு எவராலும் மேற்கொள்ளப்படாத ஓர் இமாலயப் பணியாக விளங்குகின்றது.

யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்கல்வியை நிறைவுசெய்த இவர் இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்று யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தோனேசியா, ஆகிய இடங்களிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பின்வீதியில் இயங்கிவந்த ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்திலும் நூலகராகக் கடமையாற்றித் தான் பணியாற்றிய இடங்களில் எல்லாம் நூல்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் தனது நூலியல் அனுபவங்களை எழுத்துருவில் ஆவணப்படுத்தி வந்ததால், இவரது நூல்கள் நூலகவியல் ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும்,பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கான வழிகாட்டியாக இருந்துவருகின்றது.

இவர் இலங்கையிலும் உலகின் பிறநாடுகளிலும் வெளிவந்த ஈழத்து நூல்கள், மற்றும் ஈழம் தொடர்பான நூல்களின் விபரங்களைத் திரட்டி

தொகுத்து 'நூல் தேட்டம்' என்னும் பெயரில் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்து வருகிறார். ஈழத்திலும், தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் நூல்களின் நூல் விபரப் பட்டியலை குறிப்புரையுடன் கூடியதாக காலவாரியாகத் தொகுத்துவருவது என்பது சாதாரண முயற்சியல்ல. ஒவ்வொரு நூல் தேட்டத் தொகுதியிலும் ஆயிரம் நூல்களைக் கொண்டதாக இதுவரை சுமார் 17000 நூல்கள் வரை அவரால் தொகுக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அரிய முயற்சியானது எத்தனையோ பிரச்சினைகள், சவால்களுக்கு மத்தியிலும் இன்றுவரை திரு.என்.செல்வராஜா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வெளிவந்த தமிழ் நூல்களுக்கான நூல் தேட்டத் தொகுதியொன்றும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை அயோத்தி நூலக சேவைகள் என்னும் நிறுவனத்தை நிறுவி அதன்மூலம் பதிப்பு முயற்சிகளின் ஊடாகப் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அயோத்தி நூலக சேவைகள் 1985 முதல் 1991 வரை வெளியிட்ட 'நூலகவியல்' என்னும் காலாண்டிதழின் பிரதம ஆசிரியராகவிருந்த செல்வராஜா அவர்கள் ஈழத்தின் நூலகவியலின் தந்தை என்று குறிப்பிடக்கூடிய வகையில் நூலகவியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியினையும் மேற்கொண்டு வருகின்றார்.

ஈழத்து நூலகவியல்துறையில் மிக முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருக்கும் நூல் தேட்டம் நடராஜா செல்வராஜா அவர்கள் எழுத்தாளர், ஆய்வாளர், பதிப்பாளர், விமர்சகர், நூல்களின் ஆவணக் காப்பாளர் என்ற வகையில் பன்முக ஆளுமை படைத்தவராக விளங்குகின்றார். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக திரு.என்.செல்வராஜாவின் தனிமனித முயற்சியாக ஈழத்தமிழ்த் தேசியத்தின் அறிவுலகத்தை ஆவணப்படுத்தும் நோக்கில் நூல்தேட்டம் தொகுதிகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை அவரால் வெளியிடப்பட்ட 17 நூல் தேட்டம் தொகுப்புக்களும், தமிழ் நூல்களின் ஆவணப் பொக்கிசங்களாக மட்டுமல்லாது, உசாத்துணை நூல்களாகவும்

பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாண நூலக வரலாறு தொடர்பான நூல்கள் உட்பட பல்வேறு வகையான 70க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அதே வேளை நூல் வெளியீடுகள் தொடர்பில் இலங்கையிலும் புலத்திலும் வெளிவருகின்ற பல்வேறு இதழ்களில் தொடர்ச்சியாக எழுதி வருவதுடன் ஐ.பி.சி தமிழ் வானொலி, தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடாகவும் நூலியல் தொடர்பான தனது பணிகளை மேற்கொண்டு வருவதால், உலகின் மூலைமுடுக்கெங்கும் தமிழர்களிடையே நூலகவியல் மற்றும் வாசிப்புத் திறனின் மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி உலகமே அதிரும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரு அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியூ ஆகியோரினால் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்ட சிங்களப் பொலிசாரினாலும், சிங்களக் காடையர்களினாலும் யாழ்ப்பாணத்தின் கல்வியின் அடையாளமாகவும் தெற்காசியாவிலேயே மிகச் சிறந்த நூலகமாகவும் விளங்கிய யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டபொழுது அங்கிருந்த 97000 நூல்களும், பண்டைய ஏட்டுச் சுவடிகளும் ஈழத்தின் தொன்மையான வரலாற்று ஆவணங்களும் ஆரம்பகால பத்திரிகைகளின் மூலப் பிரதிகளும் தீமூட்டி அழிக்கப்பட்ட அந்தத் துன்பியல் வரலாறானது இன்றும் ஆறாத வடுவாகத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆழமாகப் பதிந்துள்ளது. இந்தக் கொடூரமான சம்பவம் தொடர்பாக இந்தியாவிலும் ஈழத்திலும் பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், விவரணச் சித்திரங்களும், கவிதைகளும் வெளிவந்துள்ளன. அவற்றை சரியான முறையில் ஆவணப்படுத்தும் வகையில் நூல்தேட்டம் செல்வராஜா அவர்கள் தொகுத்து வெளியிட்டிருந்த ‘தீ தின்ற தமிழர் தேட்டம்’, ‘யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு’, மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ‘Rising from the Ashes: Tragic Episode of the Jaffna Library’ என்ற நூல்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் குருதி தோய்ந்த காவியத்தை எடுத்தும்கூறும் நூல்கள் என்ற வகையில்,

வாசகர்களின் நெஞ்சங்களைத் தொட்ட நூல்களாகும். ஈழத்தமிழர்களின் 40 ஆண்டுகால போர் அவலங்கள் மற்றும் உயிர், சொத்துக்களின் அழிவுகள் தொடர்பாக ஈழத்து எழுத்தாளர்களினால் சரியானமுறையில் ஆவணப்படுத்தப்படாத நிலையில் உலக வரலாற்றிலேயே மிகப்பெரும் அழிவாக அடையாளப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் எரிப்பும் அதன் அரசியல் பின்னணியும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் தொடர்பாக திரு.செல்வராஜா அவர்கள் முழுமையாக ஆவணப்படுத்தியமைக்காக உலகத் தமிழினம் அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றது. இவைபோன்ற ஆவணப்படுத்தல் முயற்சிகள் தொடர்ந்தும் அவரால் மேற்கொள்ளப்படவேண்டும் என்றே உலகத் தமிழினம் எதிர்பார்க்கின்றது. அவற்றின்மூலம் ஈழத்தமிழ் நூல்களுக்கான சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கும்.

உலகின் மூலைமுடுக்கெங்கும் குடத்துள் விளக்காக ஒளிர்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களின் படைப்புக்களை நூல்தேட்டத்தின் மூலம் வெளிக்கொணர்ந்து உலக அளவில் அவர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து வரும் திரு. என். செல்வராஜா அவர்கள் எனது 20க்கும் மேற்பட்ட நூல்களை நூல்தேட்டத்தில் ஆவணப்படுத்தியதன் மூலம் உலகில் வாழ்கின்ற தமிழர்கள் அவற்றைப் பற்றி அறியக்கூடிய வகையிலான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். அதேவேளை இலண்டனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபொழுது, யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் அவரது இரு நூல்களினதும் அறிமுகவிழா நடைபெற்றபொழுது, பல தமிழ் அறிஞர்களும், எழுத்தாளர்களும் கலந்து சிறப்பித்துக் கொண்டிருந்த நிலையில் அந்த நூல்களின் முதற்பிரதிகளை எனக்கு வழங்கிக் கௌரவித்திருந்த அவரது உயர்ந்த பண்பையும் என்னால் மறந்துவிடமுடியாது.

பழகுவதற்கு இனியவரும் சிறந்த பண்பும், சிரித்த முகமும், பன்முக ஆளுமையும் கொண்ட நூல்தேட்டம் நடராஜா செல்வராஜா அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து இலக்கிய உலகுக்கும் ஈழத்தின்

நூலகத்துறைக்கும் தொண்டாற்றி, உலகின் தொன்மையான மொழியான தமிழின் சிறப்புக்களை வெளிக்கொணரும்வகையில் மேலும் பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும், நூல் தேட்டங்களையும் வெளியிடக்கூடிய மனோ பலத்தையும், உடல் வலிமையையும் இறைவன் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து, 70 ஆண்டு நிறைவு அகவை நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும், அந்த நிகழ்வு தொடர்பாக வெளியிடப்படும் சேவை நயப்பு வெளியீடுகள் நான்கும் சிறப்புடன் வெளிவரவும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**கலாபூசணம் நடராஜா அனந்தராஜ்**
B.A.(Hons.), M.A., SLPS, SLEAS
Dip-in-Education, Dip-in-Journalism





# ஆழ்ந்த மொழிப்பற்றும் இலக்கிய ஆர்வமும் சமுதாயப் பற்றும் நிறைந்தவர்


நூலகவியலாளர் திரு. என். செல்வராஜாவுடன் நேரடி பரிச்சயம் கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிட்டியிருக்கவில்லையாயினும் அவரை நான் ஓரளவு அறிந்திருக்கிறேன். பரந்த கல்வி அறிவும், அதிலும் விசேடமாக நூலகத்துறையில் உயர் பட்டமும் அறிவும் பரந்த வாசிப்பு அனுபவமும் பெற்றிருக்கும் இவர் தமது பணிக் கடமைகளுடன் மட்டும் தமது ஆற்றலை கட்டுப்படுத்திக் கொள்ளாமல், அத்துறையின் விரிந்த களத்தில், ஆர்வமாகச் செயற்பட்டு வருவதைக் கூறவேண்டும்.

கடந்த பல வருடங்களாக இவர், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், குறிப்பாக 'ஞானம்' சஞ்சிகையில் எழுதிய ஈழத்தின் பலதரப்பட்ட நூல்கள் பற்றிய விமர்சனக் கட்டுரைகள், எழுத்தாளர்கள் பற்றிய கண்ணோட்டங்கள், அரசியல் ரீதியான கருத்துகள் ஆகியன அவரது ஆழமான அரசியல், கலை இலக்கிய நோக்கினைப் புலப்படுத்துவதைக் காணலாம்.

அத்துடன் இவ்விடயங்களில் அவர் எடுத்துரைக்கும் விமரிசனங்கள் மேலும் செயற்படத் தூண்டும் வகையிலான ஆக்கபூர்வமான கருத்துகளும் சிறப்பானவை. சிந்திக்கத்தக்கவை.

ஆழ்ந்த தமிழின உணர்வும் மொழிப்பற்றும் கலை இலக்கிய ஆர்வமும் சமுதாயப் பற்றும் நிறைந்த திரு. செல்வராஜா அவர்கள் தமது பணிகளில் மேலும் சிறப்புற்றோங்க வேண்டும் என அன்னார் தமது 70ஆம் அகவையைக் கொண்டாடும் இவ்வேளையில் மனதார வாழ்த்தி மகிழ்கின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அவர் பூரண சுகத்துடன் நீடூழி வாழ அருள்புரிவாராக!

**அன்னலட்சுமி இராஜதுரை**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 12.09.2024 அன்று இடம்பெற்ற நூலகக் கருத்தரங்கின் தொடக்கவிழாவின்போது யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி ஸ்ரீசற்குணராஜாவிடம் இருந்து கருத்தரங்க மலரின் சிறப்புப் பிரதியை பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் சி.மகேஸ்வரன் முன்னிலையில் பெற்றுக்கொண்ட பொழுதில்...

# நூல் தேட்டத் தொகுப்புகள்: அர்ப்பணிப்புடன் கூடிய ஆரோக்கியப் பங்களிப்பு!



**நூ**ல்களை ஆவணப்படுத்தலென்பது முக்கியமானதொரு தேவை மட்டுமல்ல சேவையும் கூட. அது மானுட சமூகமொன்றின் அறிவு, பாரம்பரிய நம்பிக்கைகள் ஆகியவற்றை மட்டும் பாதுகாக்கவில்லை. மானுட வரலாற்றையும், மானுட வரலாற்றின் தொழில் நுட்ப வளர்ச்சி யையும், மானுட ஆளுமைகளைப் பற்றிய விபரங்கள், அவ்வாளுமைகள் மானுட சமுதாயத்தின் மீது ஏற்படுத்திய நேர்மறையான, எதிர்மறையான தாக்கங்கள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டும் சான்றுகள், ஆவணங்களையும் பாதுகாக்கும் செயற்பாடு அது.

இவை மட்டுமல்ல இன்னும் பல ஆரோக்கியமான பங்களிப்பு களையும் சுட்டிக் காட்டலாம். அறிவியல் நூல்கள் அறிவியல் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதுடன், தொடர்ச்சியாக அத்துறைகளில் நடைபெறும் ஆய்வுகளுக்கும் உற்ற துணையாக விளங்குகின்றன. மொழியின் வளர்ச்சியை, அதன் இலக்கணத்தை முறையாகப் பேணுவதற்கும், மொழியின் அழிவைத் தடுப்பதற்கும் நூல்களும், அவற்றின் சேகரிப்புகளும் உதவுகின்றன. உதாரணத்துக்குத் தமிழரின் பழம்பெரும் நூலான 'தொல்காப்பி'யத்தைக் கூறலாம். சமூக நீதி, அநீதி பற்றிய வரலாற்று ஆவணங்களாக இருக்கும் அதே சமயம் தொடர்ந்தும் சமூக நீதியைப் பேணுதற்கு உதவியாகவுமிருக்கின்றன.

இத்தகையதொரு சூழலிலேதான் நூலியலாளர் என்.செல்வராஜாவின் 'நூல் தேட்டம்' என்னும் ஆவணத்தொகுப்புகள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. ஒவ்வொரு தொகுப்பும் ஆயிரம் நூல்களைப் பற்றிய விபரங்களை உள்ளடக்கியுள்ளது. வெறும் தகவல்களை மட்டும் கொண்ட தொகுப்புகள் மட்டும் அவை அல்ல. பல நூல்களைப் பற்றிய, நூலாசிரியர்கள் பற்றிய சுருக்கமான விமர்சனக் குறிப்புகளையும் அவை உள்ளடக்கியுள்ளன. இவ்விதம் நூல்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதும், விமர்சனக் குறிப்புகளைத் தொகுப்புகளில் உள்ளடக்குவதும் சாதாரணமான விடயமல்ல. மிகுந்த அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பையும், நேரத்தையும் மற்றும் செலவையும் வேண்டி நிற்பவை. இத்தொகுப்புகள் ஒவ்வொன்றின் பின்னாலும் நூலகர் செல்வராஜா அவர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பும், சமூகப் பிரக்ஞையும் இருக்கின்றன.

'நூல் தேட்டம்' தொகுப்புகளுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. நூலகராகப் பணிபுரிந்த அவரது நீண்டகால அனுபவங்கள் நூலகத் துறையில் மேலும் பல நூல்களை எழுத வைத்துள்ளன. உதாரணத்துக்கு கிராம நூலகப் பொறுப்பாளர்களுக்கான வழிகாட்டி (1989), கிராம நூலகங்களும் அபிவிருத்தியும் (1989), நூலகப் பயிற்சியாளர் கைநூல் (1989), நூலகர்களுக்கான வழிகாட்டி (1990), சனசமூக நிலையங்களுக்கான கைநூல் (1990), ஆரம்ப நூலகர் கைநூல் (1991) போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். அவரது 'யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு' (2001) முக்கியமானதொரு தொகுப்பு நூல்.

அத்துடன் அயோத்தி நூலக சேவைகள் 1985 முதல் 1991 வரை வெளியிட்ட 'நூலகவியல்' காலாண்டிதழின் பிரதம ஆசிரியராகவும் நூலகர் என்.செல்வராஜா இருந்திருக்கின்றார். அதுவும் முக்கியமானதொரு பங்களிப்பு.

நூலகர் என். செல்வராஜா அவர்களின் நூல் ஆவணத்துறை, நூலகத்துறை ஆகியவற்றுக்கான ஆக்கபூர்வமான பங்களிப்புகள்

நன்றியுடன் விதந்தோதப்பட வேண்டியவை. இன்னும் நீண்ட காலம் தேக ஆரோக்கியத்துடனும், இன்றுள்ள இதே துடிப்புடனும், ஆர்வத்துடனும் அவரது வாழ்வு அமைந்திட மனப்பூர்வமான வாழ்த்துகள்.

**வ.ந.கிரிதரன்**
எழுத்தாளர்,
'பதிவுகள்' இணைய இதழ் ஆசிரியர்



ஏழாலை சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தின்
அரிய நூற்சேர்க்கைகளை 2018இல் பார்வையிட்ட வேளையில்....



# தனக்கென வாழாத் தகைசால் பெரியார்

*''காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது''*

**எ**ன்பார் வள்ளுவர். அன்புக்குரிய நடராஜா செல்வராஜா அவர்கள் உருவத்தாலும் உள்ளத்தாலும் உயர்ந்த தன்னலமற்ற சேவையாளன். மின்மினிப் பூச்சிகள் தம்மை அடையாளங்காட்ட ஒரு வெளிச்சத்துடன் பறக்கும். அவ்வாறாகத் தம்முடைய படைப்புக்களை மாத்திரம் வெளிக்கொண்டு வருகின்றவர்களுக்கு மத்தியில் இவர் ஒரு மாறுபாடானவர். இரவு பகல் என்னும் நேரக்கணக்கின்றி எழுத்தாளர்களைப் பதிவு செய்து, அவர்களின் நூல்களை ஆவணப்படுத்தி, அவர்களுக்கு அழியாப் புகழ் சேர்க்கும் ஆவணக் காப்பக உரிமையாளர். ஊர்க் குருவிபோல் உலகெங்கும் பறந்து பறந்து நூலகங்கள், பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு நூல்களைப் பரிசளிப்பவர். இத்தகைய நடராஜா செல்வராஜா அவர்களின் 70ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஒரு நூல் வெளிவருவது பாராட்டுக்குரியது. அந்தச் சிறப்பு மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

*''ஒரு பொழுது கூடத் திறக்காவிடினும் சரி*
*ஒரு மொழி கூடப் பேசாவிடினும் சரி*
*நூல்களைப் போல வீட்டை அலங்கரிக்கும்*
*அழகான பொருட்கள் வேறு கிடையாது''*

என்று ஸிட்னி ஸ்மீத் அவர்கள் கூறுவார். அதேபோல் ஓர் அழகை செல்வராஜா அவர்களின் வீட்டில் கண்டேன். ஒருமுறை எனக்கு இவர் தான் தனியாளாய் செய்துவருகின்ற தன்னுடைய ஆவணப்படுத்தலைக் காணொளி மூலம் அறியத்தந்தார். அதைப் பார்த்தபோது, நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். எவ்வளவு நூல்கள், எவ்வளவு பிரயத்தனங்கள், எத்தனை ஒழுங்கு முறைகள். அவற்றைப் பார்த்த பின் இவரில் இருந்த மதிப்புப் பல மடங்கு பெருகியது.

இவர் பாடசாலைகளுக்கு நூல்களை அன்பளிப்பாக வழங்குவதுடன், இலங்கைக் கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வாசிப்புத் திட்டத்தைப் பரிந்துரை செய்வதுடன், நூல் வாசிப்பு அருகிக்கொண்டு போகின்ற இக்காலகட்டத்தில் தேடலில் இருந்தே வாசிப்புப் பழக்கம் உருவாக வேண்டும் என்பார்.

எனக்குக் குரல்வழிப் பரிச்சயமானவரை முதன் முதலாக வெற்றிமணிப் பத்திரிகையின் 25ஆவது ஆண்டுவிழாவிலேயே சந்தித்தேன். அவ்விழாவிலே வெற்றிமணி இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது.

உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் வாழுகின்ற நடராஜா செல்வராஜா அவர்கள் இலங்கையின் நீர்கொழும்பு என்னும் பிரதேசத்திலே பிறந்தார். இந்த ஊருக்கும் எனக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. செல்வராஜா அவர்கள் கற்ற பாடசாலையிலேதான் நான் பிற்காலத்தில் கற்பித்தேன் என்பது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. எதிர்வரும் 20.10.2024 அன்று இவருடைய 70ஆவது பிறந்த தினத்தை தமிழ் வான் அவையில் கொண்டாடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

இவர் எழுதாத சஞ்சிகைகள் எங்கே? பத்திரிகைகள் எங்கே? நூல்கள் வழங்காத பாடசாலைகள் எங்கே? என்று தேட வேண்டும். மட்டக்களப்பில் உருவாகிவரும் நூலகத்துக்கு ஆலோசகராக இருப்பதுடன், ஆயிரக்கணக்கில் நூல்களைச் சேகரித்துக்

கையளித்ததுடன் 'மட்டக்களப்பில் பொலிவு பெறும் பொதுசன நூலகம்' என்னும் நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார்.

சமூகப்பற்றும், பொறுப்பும், தன்னலமற்ற குணமுமிக்க, எழுத்தாளர்களுக்கு மகுடம் சூட்டும் நடராஜா செல்வராஜா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுக்குப் பணியாற்ற வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)**

தமிழ் வான் அவை நிறுவுனர்

ஜெர்மனி



வெற்றிமணி வெள்ளிவிழா நிகழ்வின்போது ஜேர்மனியில் 15.09.2019 அன்று வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரனிடமிருந்து வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றுக்கொண்ட பொழுது.

# பத்திரிகைகள், நூல்கள் தொடர்பில் ஆழமான ஈடுபாட்டைக் கொண்டவர்



மனித வாழ்க்கையில் நூல்கள் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்கின்றன. அந்த நூல்களுடன் வாழ்வதென்பது பல்துறை சார்ந்த விடயங்களை தெளிவாக அறிந்து கொள்ள வழிவகுக்கும்.

ஈழத்து இலக்கியத்துறையில் படைப்பாளிகளால் நன்கறியப்பட்ட நூலகவியலாளர் என். செல்வராஜா இலண்டன் லூட்டனில் வாழ்ந்துவருபவர்.

இவரது பெயரை 2000ஆம் ஆண்டளவில் லண்டனிலிருந்து ஒலிபரப்பாகிய ஐபிசி வானொலியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வந்த 'காலைக்கலசம்' நிகழ்ச்சியில் ஓர் அங்கமாக இடம்பெற்ற 'நூல்தேட்டம்' நிகழ்ச்சி மூலமே முதன் முதலாக அறிந்து கொண்டேன். இலங்கையில் இவர் வாழ்ந்த காலத்தில் நூலகப்பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

1959ஆம் ஆண்டு 'ஈழநாடு' யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்தது.

இலங்கையில் தலைநகரைத்தாண்டி வடக்கில் இருந்து வெளியான முதலாவது தமிழ் தினசரிச் செய்திப்பத்திரிகை என்ற பெருமை 'ஈழநாடு'க்கு உண்டு.

கிழக்கிலங்கை வாழைச்சேனை காகித ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக விளங்கிய யாழ்ப்பாணத்தவரான கே.சி. தங்கராசா, டாக்டர் கே.சி. சண்முகரத்தினம் சகோதரர்களால் 'ஈழநாடு' வெளியிடப்பட்டது.

'ஈழநாடு' பத்திரிகையின் முதல் பிரதியை, பத்திரிகை ஆசிரியர்கள், நிர்வாகிகள் ஆகியோர் அதிகாலை நான்கு மணியளவில் யோகர் சுவாமிகளிடம் சமர்ப்பித்து ஆசி வேண்டினர்.

அப்பொழுது யோகர் சுவாமிகள்: ''ஏசுவார்கள்.. எரிப்பார்கள்.. உண்மையை எழுதுங்கள்.. உண்மையாய் எழுதுங்கள்'' என்றுரைத்தார்.

சுவாமிகளது வாய்மொழி பொய்த்துப் போகவில்லை.

1981ஆம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் சிங்களக்காடையர்களின் பெற்றோல் குண்டு வீச்சுத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு எரிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் யாழ். நூலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை என்பனவும் எரியூட்டப்பட்டன.

1983ஆம் ஆண்டில் ஈழத்தமிழ் மக்களின் புலப்பெயர்வின் அதிகரிப்பை அடுத்து பிரான்ஸ் நாட்டிலிருந்தும் 'ஈழநாடு' வெளிவந்தது. பரிஸ் ஈழநாடு இயக்குநராக இருந்து வழி நடத்தினேன்.

கனடாவில் இருந்தும் ஈழநாடு வெளிவந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழநாடு' மீள் உருவாக்கம் பெற்று, அன்று ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றி வந்த எஸ்.எஸ்.குகநாதன் அவர்களின் நிர்வாகத்தில் தற்போது வெளிவந்துகொண்டிருக்கிறது.

இந்த வரலாற்றை நூலகவியலாளர் என். செல்வராஜா தனது பதிவுகளில் எழுதியிருப்பதுடன், 'நூல்தேட்டம்' நிகழ்ச்சியிலும் பேசியிருக்கின்றார். அவர் ஐபிசி தமிழ் வானொலியில் அன்று பேசியவை (2009 க்கு முன்னர்) எனது நினைவுக்கு வந்தன.

நாம் பணியாற்றிவந்த நிறுவனத்தினுடைய தகவல்களை மிக நுணுக்கமாக அவர் பதிவிட்டுள்ளார், பேசியுள்ளார்.

பத்திரிகைகள், நூல்கள் தொடர்பில் செல்வராஜா எவ்வளவு ஆழமான ஈடுபாட்டையும் அர்ப்பணிப்பையும் கொண்டிருக்கிறார் என்பதை அவருடைய இத்தகைய செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கவிஞர், எழுத்தாளர் வண்ணை தெய்வம் எழுதிய 'காலங்கள் வாழ்த்தும் 300 ஈழத்துக்கலைஞர்கள்' என்ற நூலின் வெளியீடு பரிஸில் நடைபெற்றது. கலாநிதி இளவாலை அமுதுப்புலவர் அவர்கள் தலைமை தாங்கினார். நூலை நான் வெளியிட்டு வைத்தேன். அந்த நிகழ்வில் முதன் முதலாக மேடையில் செல்வராஜாவை சந்தித்தேன். 'என்னுள் என்னோடு' என்ற நூலை எனது பத்திரிகைத்துறை, இலங்கை அரசியல் சார்ந்த அனுபவங்களை பதிவிட்டு வெளியிட்டிருந்தேன். அந்த நூலை செல்வராஜா தனது நூல்தேட்டத்தில் பதிவிட்டிருந்தார்.

அந்தப்பதிவு பல்கலைக்கழகங்கள், நூலகங்கள் என்பன வற்றுக்கும், பல ஆளுமையாளர்களிடமும் எனது நூல் சென்றடையத் துணை புரிந்திருக்கிறது. எழுபதாவது அகவையை அடைந்துள்ள என்.செல்வராஜா தனது நூல்தேட்டப் பணியை மென்மேலும் சிறப்பாகத்தொடர வேண்டும் என உவகை பொங்க வாழ்த்துகிறேன்.

**எஸ்.கே.காசிலிங்கம்**
முன்னாள் உதவி-ஆசிரியர்-ஈழநாடு
பிரான்ஸ்.



23.09.2018 அன்று கோலாலம்பூரில் டத்தோ சகாதேவன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிப்பளிப்பு நிகழ்வில் மலேசிய பிரமுகர்களான டாக்டர் கா.ஹரிகிருஷ்ணன், மலேசிய எழுத்தாளர் சங்கத் தலைவர் இராஜேந்திரன், டத்தோ சகாதேவன், மலாயா பல்கலைக்கழக நூலகர் திருமதி கோமதி தெய்வீகன், கலாநிதி கிருஷ்ணன் மணியம் ஆகியோருடன் நூலகர் என்.செல்வராஜா.

# இளைஞரின் துடிப்புடன் இயங்குபவர்



**எ**மது தாயகத்திலே யாழ் மாவட்டத்தில் ஆனைக்கோட்டை என்னும் அழகிய ஊரில் 20. 10. 1954 இல் பிறந்த நூலகர் நடராஜா செல்வராஜா அவர்களின் அகவை எழுபது பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக வெளிவரும் இந்த மலரின் ஊடாக அவரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் ஒரு கடின உழைப்பாளி. எமது ஈழத்து நூல்கள், ஈழம் தொடர்பான நூல்கள் இலங்கையிலோ, அல்லது வெளிநாடுகளிலிருந்தோ வெளிவந்தாலும் அந்த நூல்களைப் பற்றிய தகவல்களை அறிந்து அவற்றைப்பெற்று இணைய நூலகத்திலுள்ள நூல்தேட்டத்தில் தொகுத்து வருகின்றார்.

இவர் ஈழத்து எழுத்தார்களின் நூல்களையும், புலம்பெயர் எழுத்தாளர்களின் நூல்களையும் தனது நூல்தேட்டம் தொகுதிகளில் 2002ஆம் ஆண்டு முதல் பதிவு செய்துவந்துள்ளார். அந்தவகையில் எனது சில நூல்களையும் இவர் நூல்தேட்டத்தில் தொகுத்து வழங்கியுள்ளார். அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

விரைவில் மட்டக்களப்பில் திறக்கப்படவிருக்கும் புதிய நூலகத்திற்கு இவர் அண்மையில் இருபத்தியையாயிரம் நூல்களை அனுப்பி வைத்துள்ளார். அவை ஆங்கிலம், தமிழ் நூல்களாகும். இது மிகப் பெரிய பங்களிப்பும் செயற்பாடுமாகும். அதற்காக அவரை இந்த சந்தர்ப்பத்தில் ஒரு மட்டக்களப்பின் மைந்தன் என்ற வகையில் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

மட்டக்களப்புக்கும் சென்று அங்குள்ள எழுத்தாளர்கள், மற்றும் இலக்கியவாதிகளை சந்தித்து வந்தவர்.

அகவை எழுபதை அடைந்துள்ள நண்பர் செல்வராஜா அவர்களுக்கு எழுபது என்பது இலக்கத்திலேயே இருக்கட்டும். அவர் இன்னும் ஒரு இளைஞரின் துடிப்புடன் இயங்கவேண்டும். இயங்குவார். தொடர்ந்தும் பல நூல்களை பல நூலாசிரியர்களிடமிருந்து பெற்று தனது நூல் தேட்டத்தில் இணைத்துக் கொள்ளவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கொள்கின்றேன்.

அவரது எழுபதாவது பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டு அவர் மன மகிழ்சியுடன் நோய்நொடியின்றி நூறாண்டுகாலம் வாழ நெஞ்சம் நிறைந்து வாழ்த்தி மகிழ்கின்றேன்

**கோவிலூர் செல்வராஜன்**

லண்டன்.



26.10.2024 அன்று ஐங்கரன் விக்னேஸ்வராவின் நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நிகழ்ந்தபோது கோவிலூர் செல்வராஜனின் முன்னிலையில் நூலாசிரியரிடமிருந்து சிறப்புப்பிரதி பெற்றுக்கொண்ட வேளை....

"மண்"கல்வி,கலை,இலக்கிய,சமூக சஞ்சிகை-யேர்மனி
(ஆரம்பம் - 1990)
"ERDE" e.V. Stiftung &Tamilisches Magazin - Deutschland
"MANN" (Earth) Foundation & Tamil Magazine - Germany
AmWindhövel-18a, 47249-Duisburg
Tel 49 203 8073898 , 49 15254799233 Emai v.sivarajah @ arcor.de

---

# வயதில் எழுபதையும் எழுத்தில் ஐம்பதையும் தொடும் பேனாப் போராளி....



பிரித்தானியாவில் வாழ்ந்துவரும் நூலகவியலாளர் தமிழ்த்திரு நடராசா செல்வராசா அவர்களின் எழுபதாவது அகவையைச் சிறப்பிக்கும் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதில் எனது வாழ்த்தையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பர் செல்வராசா அவர்கள் நூலகப்பணியில் ஐம்பது ஆண்டுகள் அதாவது பொன்விழாக்கண்ட பெருமகனாவர். தமிழ் ஊடகம், நூல்களின் தேடல்கள், நூல்களின் பதிப்பு, தமிழின் வளர்ச்சிக்கு சுமார் அரை நூற்றாண்டுகளாக அரும்பாடுபட்டு உழைத்துவரும் ஒரு பேனாப் போராளியாகவே கண்டுகொண்டுள்ளேன். பெரும் முயற்சி, இடைவிடாத தேடல், கடின உழைப்பின் மூலம் இன்று நூலகத்துறையில் தமிழ் உலகம் கண்டுகொண்ட மாபெரும் பொக்கிஷமாகவே இவரைக் கருதுகின்றேன்.

நூல்தேட்டம் என்ற பெரும் தேடலில் ஒவ்வொன்றும் ஆயிரம் நூல்களைக் கொண்ட சுமார் பதினேழுக்கும் மேற்பட்ட தொகுதிகளை பதிப்பித்து இந்தத் தமிழுலகத்திற்கு அறிமுகம் செய்திருப்பதுடன் பல நூல்கள், கட்டுரைகள், ஆவணக் குறிப்புகள், புராதனகால தமிழர் வரலாறுகள் எனப் பல்வேறு நூல்களைப் பதிப்பித்து வெளியீடு செய்திருக்கிறார்.

அதாவது சுமார் 500 - 600 வருடங்களின் முன்பு இருந்து இற்றைவரை உலகில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய கர்த்தாக்களை இந்த உலகிற்கு அறிமுகம் செய்திருக்கின்றார். குறிப்பாக இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலுள்ளவர்களையும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்துகொண்டிருப்பவர்களையும் தனது தேடலின் மூலமும் தனது உழைப்பின் மூலமும், பணச்செலவுகளையும் பாராது பொதுநோக்கோடு அரும்பாடுபட்டு உழைத்துவரும் இவரைப் பாராட்டுதல் என்ற ஒற்றை வரிக்குள் அடக்கிவிட முடியாது.

அன்பர் செல்வராசா அவர்களின் தமிழ், ஊடகப்பணி என்பது மலைபோன்று உயர்ந்து நிற்கின்றது. நிறையவே எழுதலாம். வாழ்த்துவதில் சுருக்கமாகக் குறிப்பிடுவது நல்லது. கடந்த 35 ஆண்டுகளாக யேர்மனியில் வெளிவந்துகொண்டிருக்கும் எமது ‘மண்’ கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையோடும் என்னோடும் நீண்ட நெருங்கிய தொடர்பில் இருந்து வருகின்றார். அவரின் நூல்தேட்டப் பணிகள்பற்றி அவ்வப்போது எமது சஞ்சிகையில் வெளியிட்டு வருகின்றோம்.

யேர்மனியில் சுமார் இருபத்திரண்டு வருடங்களின் முன்பு தோற்றம் பெற்று இயங்கிவரும் ‘‘யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்’’, தலைவராக நான் நீண்ட காலம் பணிபுரிந்த வேளைகளில் மட்டுமல்ல இற்றைவரை எமக்கு ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கி எம்மை உயர்ச்சிபெற வைத்த பெரும் பங்கு இவருக்கே உண்டு.

நூலகவியலாளர் அவர்களின் உழைப்பு, பெரும் முயற்சியால் அவர் தமிழர்கள் வாழும் உலகநாடுகள் அனைத்திற்கும் விஜயம்செய்து பல எழுத்தாளர்களைத் தேடித்தேடி இனங்கண்டு அவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி மாபெரும் வரலாற்றுப் பணியைப் பதிவு செய்திருக்கிறார். இதனால் உலகமெல்லாம் பல விருதுகளும் பாராட்டுகளும் இவருக்குக் கிடைத்திருக்கின்றன.

வாழும் பொழுதுகளில் இப்படிப்பட்டவர்கள் வாழ்த்திப் பாராட்டப்படுவதுதான் சாலச்சிறந்தது. அந்த நல்நோக்கத்திற்காக அவரின் 70ஆவது ஆண்டு பிறந்தநாள் மலரை வெளியீடுசெய்யும் விழாக்குழுவினருக்கு எனது நன்றிகள்.

வயதில் எழுபதையும் எழுத்தில் ஐம்பதையும் தொட்டுச் சிறப்புச் சேர்த்திருக்கும் அன்பர் நூலகவியலாளர் செல்வராசா அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நோய் நொடி இல்லாமல் இன்புற்று வாழ்ந்து, அவர் சார்ந்த நூல்தேட்ட, கலை, இலக்கிய, எழுத்துப் பணிகள், ஊடகப்பணிகளில் புதிய சாதனைகள் படைக்க வேண்டுமென எனது இதயபூர்வமான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!..

நட்போடும்.. மகிழ்வோடும்!...

**வைரமுத்து சிவராசா**
பிரதம ஆசிரியர்
'மண்' கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை
யேர்மனி



23.09.2024 அன்று இலங்கை நூலகச் சங்கத் தலைவர் நண்பர் பிரீத்தி லியனகேயுடன் ராகலை பிரதேசத்தில் உள்ள டெல்மர் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்திற்கு விஜயம் செய்து அந்த நூலகத்திற்கு ரூபா 20,000 பெறுமதியான சிறுவர்களுக்கான தமிழ் நூல்களை அன்பளிப்பாக வழங்கிய வேளையில் அங்கு பணியாற்றிய தொண்டர்களுடன் எடுத்த புகைப்படம்

## புலம்பெயர் தமிழ்நூல் வரலாற்றில் அழியாத மைற்கல்லை ஏற்படுத்தியவர்



மனிதவாழ்வில் மனிதனை மேம்படச் செய்யும் சேவைகள் மகத்துவமானது, மறக்கற்பாலது.அந்த வகையில் எவர் ஒருவர் செயற்படுகிறாரோ அவர் சமுதாயத்தால் வரவேற்கப்பட்டுப் பாராட்டையும் பெறுகிறார் என்பது வரலாறு கண்ட உண்மை.

நூல்கள் அதன்வழி வாசிக்கும் பழக்கம் ஒருவனைச் சிந்தனையாளனாக மாற்றுகிறது. மனிதநேயத்தையும் மானிடப் பண்புகளையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது அவனும் பண்பட்ட மனிதனாகின்றான். இந்த குணாதிசயங்களைத் தன்னகத்தேகொண்டு, நூல்கள் எழுதுவதிலும் பிறர் எழுதிய நூல்களைச் சேகரிப்பதிலும் தம் வாழ்நாட்களின் பெரும்பகுதியைச் செலவிட்ட நூலகவியலாளர் திரு .என். செல்வராஜா அவர்களின் உழைப்பு அளப்பரியது. ஐரோப்பா ரீதியாக மட்டுமல்ல உலகரீதியாகவே வெளிவந்த எம்மவர் நூற்படைப்புகளைத் தொகுத்து ‘நூல்தேட்டம்’ என்ற பெயரில் வெளியிட்டது மலையுயரம்தொட்ட மாபெரும் சாதனையெனில் மிகையாகாது. இவரது இந்த அளப்பரிய சேவையினால் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் நூற்பெயரும் வகையும் அதன் கர்த்தாக்களும் உலக அரங்கில் அறிமுகமாகினர்.

தாம் கற்ற நூலகவியற் கல்வியின் பயனாக இந்த அரிய முயற்சியை மேற்கொண்டு புலம் பெயர் நாடுகளில் வெளியீடு செய்தமை நூல்களுக்கு உயிரளித்ததுபோல் எழுத்தாளர்களும் வாசகப்பெருமக்களும்

உணர்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. நூலகரின் இந்தச் சிறப்பான சேவை மனப்பான்மை செயல்வடிவம்பெற்று புலம்பெயர் தமிழ்நூல்கள் வரலாற்றில் அழியாத மைற்கல்லாக நிற்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவரது சேவையும் ஆயுளும் மேலும் வளர வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்க! வளர்க!

**திரு.சு.பாக்கியநாதன்** பீ.ஏ
**திருமதி.விக்னா பாக்கியநாதன்** பீ.ஏ
ஜேர்மனி




14.07.2023 வாழைச்சேனை, பேத்தாளை நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின் போது...

# அருமையான நூலகப்பணி செய்கின்ற வல்லுனர்!



*அருந்தமிழ் நூல்களை*
*காத்திடும் வல்லவர்!*
*ஆற்றல் அறிவுடன்*
*அன்புடன் பேசியே*
*தமிழ் தமிழர் தமிழ்*
*உலகம் காத்தவர்!*
*தனித்துவமாக*
*பழையநூல் பேணி,*
*புதியன போற்றிப்*
*பாதுகாத்தவர்!*

*புத்தகம் மூலம் வித்தகனாகி*
*புதிய உலகம் படைத்தவர்!*
*எத்தனை நூல்கள்! எத்தனை விடயம்!*
*எம்மவர் சாதனை! உலகம் முழுதும் !*

*அறிவே ஆயுதம் என்பவர் தமிழர்! இதுவே இவரின்*
*தாரகமந்திரம்! நாமும் தானே! நம்மவர் உயிரே!*
*இவரது வழியில் வாழ்வதும் அறிவே!*
*வளர்க வளர்க நீடூழி வாழ்க! உலகும் வாழ்க!*
*வாழும்போதே வாழ்த்துவோம்! உலகம் போற்ற வாழ்கவே!*

என்றும் நட்புடன்,

**நல்லையா சண்முகப்பிரபு**
சிவன் தமிழ் ஆலயம் - சிவயோகி ஆசிரமம் - சிவன் தமிழ் சிற்பூங்கா
நோர்வே
+47 91784271

# உங்கள் அயர்வறியா தேடல் இனிவரும் தலைமுறைக்கும் வழிகாட்டும்



இன்று உங்கள் 70ஆம் ஆண்டு பிறந்த நாளை எளிமையாக ஆனால் மிக ஆழமான மரியாதையுடன் மகிழ்வு கொள்கின்றேன். இந்த நாளை உங்கள் வாழ்வின் ஒரு சிகரமாக மட்டும் அல்ல, ஒரு பயணத்தின் தொடர்ச்சியாகவும் காண விரும்புகிறேன் - அது நீங்கள் ஏற்கனவே நிகழ்த்திய அசாதாரண சாதனைகளுடன் இன்னும் நிகழும்.

உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் எழுதுவதன் வழியே, நீங்கள் கண்ட 'நூல்தேட்டம்' என்ற மொழியில் வாழும் மகத்தான அழியாக் கனவுக்கு வாழ்த்துக்களை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். என் உறவில் கலந்துவிட்ட இலட்சியவாதிக்கு என்னுள் உள்ள மரியாதை என்றே இதைக் கொள்கின்றேன். நூல்களைச் சேகரித்து, அவற்றை ஒரு அட்டவணைக்குள் அடக்கி தொகுத்து வெளியிடுவது, இவை அனைத்தும் ஒரு சாதாரண செயலாக இல்லை. எங்கும், என்றும் ஒரு ஒட்டுமொத்த சமூக ஏற்புக்குரியது.

தமிழர் வரலாற்றில் நம்பியாண்டார் நம்பி மறைந்து போகக்கூடிய திருமுறைகளைக் கைப்பற்றியதற்காக அவரை இன்றும் வரலாறு பேசுகிறது. அவ்வாறே, உங்களின் உழைப்பும் இன்றைய மற்றும் எதிர்கால தமிழ் வாசகர்களின் நெஞ்சில் ஒரு அழியாத தடமாக என்றும் நிலைகொள்ளும்.

இலங்கைத் தமிழ் இலக்கிய உலகம் மட்டுமல்ல, தமிழின் பரந்த உலகம், உங்கள் பங்களிப்பிற்காக நீங்கள் செய்ததைக் கொண்டாடும்.

நீங்கள் பகிர்ந்த நூல்களால் விளைந்த அறிவுத்தொகையால் எத்தனையோ வாசகர்கள் அறிவின் தேடலை அடைந்து கொண்டிருக்கின்றார்கள்.

உங்கள் உழைப்பின் மூலம் தமிழில் ஒரு செழிப்பான மரபு நீடிக்கத் தூண்டியிருக்கின்றீர்கள். அதில் உங்கள் தொண்டு என்பது முக்கியமான அத்தியாயமாகும். உங்கள் வானொலி உரைகள், உன்னதமான அறிவையும் தேடலையும், தனித்துவமான மனப்பாங்குடன் வெளிக்காட்டின.

அறிவின் வழியில் நீள, நீண்ட நெடுந்தொடர் வாழ்க்கை உங்களுக்கு என்றும் தொடர வேண்டுகிறேன். உங்கள் அயர்வறியா தேடல்கள் இனி வரப்போகும் தலைமுறைகளுக்கும் வழிகாட்டும். ஒளியாகத் திகழட்டும்.

நெஞ்சார்ந்த நட்புடன்
**கனகசபாபதி சரவணபவன்**




14.07.2023 வாழைச்சேனை, பேத்தாளை நூலகத்தில்
ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலின் போது

ශිවනේසතුරෛ චන්ද්‍රකාන්තන්, පා.ම.
ග්‍රාමීය මාර්ග සංවර්ධන රාජ්‍ය අමාත්‍ය
சிவநேசதுரை சந்திரகாந்தன், பா.உ.
கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
Shivanesathurai Santhirakanthan, MP
State Minister of Rural Roads Development

| | | |
|---|---|---|
| මාගේ අංකය<br>எனது இல<br>My No } MP/BT/GM/2024/04 | ඔබේ අංකය<br>உமது இல<br>No } | දිනය<br>திகதி<br>Date } 20.08.2024 |

# உள்ளக் கமலம் நிறைந்த மனிதர்



'அரங்கம்' மின்னிதழில் வரும் முக்கிய கட்டுரைகளை அவ்வப்போது பிரதியெடுத்து கொண்டுவரச்செய்து வாசிப்பேன். அப்படியொருநாள் கிடைத்த பிரதியொன்றில் வாசிக்கக் கிடைத்த கட்டுரைத் தொடரொன்று என் கவனத்தை ஈர்த்தது. அதைப்படிக்கத் தொடங்கியதும் என் உடலெங்கும் பரவிய பரவசத்துக்கு அளவிருக்கவில்லை.

2008-2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக நான் பணியாற்றிய வேளைகளில் எத்தனையோ கட்டடத் தொகுதிகளுக்கு அடிக்கல் நாட்டியிருப்பேன். அவற்றில் முழுமையாக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கமுடியாது போன ஒரேயொரு கட்டடம் பற்றிய கட்டுரையே அதுவாகும். எண்ணற்ற கனவுகளுடன் நான் கட்டியமைக்கத் தொடங்கிய அந்த மட்டக்களப்பு நூலகத்துக்கான புதிய கட்டடத்தொகுதி கேட்பாரற்று பாதியிலே கைவிடப்பட்டுக் கிடப்பதை எண்ணி நான் மனம் கலங்காத நாட்கள் இல்லை. நான்

பதவியிழந்த பின்னர் அந்தப் பெரும்பணியை தொடரவோ அதனை ஏறெடுத்துப் பார்க்கவோ வரும் முன்வராத நிலையே காணப்பட்டது. அப்படியிருக்க அந்த நூலகத்தைப் பற்றி முதலாவதாக வெளியாகும் கட்டுரையே அதுவாகும் என்பதால் அத்தனை பரவசம்.

அது சரி இந்த கட்டுரைத் தொடரை யார் எழுதுகின்றார்கள் என்று பார்த்தபோதுதான் எனக்கு ஆச்சரியம் மிகுந்தது. அவர் பெயர் என். செல்வராஜா, லண்டனில் வாழ்பவர், பிரபல நூலகவியலாளர், அத்தனைக்கும் மேலாக மட்டக்களப்புக்கும் அவருக்கும் வெகு தூரம்.

மட்டக்களப்பின் பாலையும் தயிரையும் உண்டு களித்தவர்களுண்டு. இறாலையும் நண்டையும் இரசித்து ருசித்தவர்களுண்டு. அம்மானை வசந்தனில் வயப்பட்டு நின்றவர்களுண்டு. அழகான மகுடிக் கூத்திலே மனம் லயித்துக் கிடந்தவர்களுண்டு. எங்கள் மங்கையரின் வாய்ப்பேச்சில் மயங்கி பாயிலே ஒட்டிக்கொண்டவர்களுமுண்டு. ஆனால் மட்டக்களப்பில் கிடப்பிலேயே கிடந்த ஒரு நூலகக் கட்டடத்தை கண்ணுற்று அதன் மேல் மையல் கொண்ட மனிதனை முதன் முறையாகக் காண நேர்ந்தது. அந்தக்கட்டுரையில் அவர் வெளிப்படுத்திய ஆதங்கம் அந்த மையலை பறைசாற்றி நின்றது.

மட்டக்களப்பிலொரு நூலகம் கட்டப்பட்டு கைவிடப்பட்டு கிடையாய்க் கிடக்கிறது என்பதையறிந்து அதன் மேல் காதல் கொண்டு கசிந்து கண்ணீர் மல்கிய அவர் அதனை எவ்வாறு பொலிவுறச்செய்வது? எப்படி எப்படியெல்லாம் அதனை வளப்படுத்துவது? என்கின்ற கனவுகளில் மிதந்தார். அதுமட்டுமன்றி மட்டக்களப்பு நூலகத்தின் வரலாறு என்ன? சூறாவளி,யுத்தம்,சுனாமி போன்ற அனர்த்த காலங்களில் அது எப்படியான அழிவுகளைச் சந்தித்தது? எப்படியெல்லாம் அது மீண்டெழுந்தது? என்பதையெல்லாம் தேடித் தேடித் தொகுத்து அவற்றை ஆவணத் தொடராக எழுதிக்கொண்டிருந்தார். யார் இதனைக் கட்டினார்? அவரது அரசியல் என்ன? என்பது பற்றியெல்லாம் அவர் அலட்டிக்கொள்ளவில்லை. அவர் கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் ’மட்டக்களப்பு நூலகம்’ மட்டுமேயாகும்.



15.07.2023 அன்று மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில்
இடம்பெற்ற நூல்வெளியீட்டில் மதிப்பளிப்பு.

மேலும் இலங்கை முழுவதிலுமுள்ள பல்வேறு நூலகங்களுக்கு பல்லாயிரக்கணக்கான நூல்களை லண்டனிலிருந்து சேகரித்து கொடையாக அனுப்பிக்கொண்டிருக்கின்றார் என்றும் கேள்வியுற்றேன்.

உழைக்கப்போன ஊரிலிருந்து தானுண்டு, தன் குடும்பமுண்டு என்று குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டிருக்காமல் இனம் சார்ந்து உருப்படியாக கருமமாற்றும் உன்னதமான மனிதர்களும் இருப்பதையெண்ணி மகிழ்வுற்றேன். இது எப்படி சாத்தியம்? என் மனதுக்குள் எழுந்த கேள்விகளுக்கு விடைகளைத் தேடியபோதுதான் அவரைப்பற்றிய தகவல்களை அறிந்து கொண்டேன். நூலகவியல் துறைசார் அறிஞரான அவர் நூலகங்களின் தீராத காதலனாய் இருந்தார்.

தேசியக் கடமை என்பதே எம்வாழ்நாளில் நான்கைந்து குழந்தைகளுக்காவது நல்லறிவூட்டல்,நாளைய அறிஞர்களாக வளர அவர்களுக்கு வழிகாட்டல்,அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கப் பாடுபடல் என்கின்ற ஆழமான புரிதல்களுடன் இயங்கியவரும் அவரை தமிழ் தேசியத்தின் சத்தியமான போஷகராக என்னால் அடையாளம் காண முடிந்தது. இத்தகைய செயற்பாடுகளே ஒரு தேசிய இனத்தின் அடிப்படைகளான மொழியையும் கலை, கலாசார அம்சங்களையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தவல்ல பாதைகள் என்பதில் நம்பிக்கை கொண்டு என்னைப்போலவே அவரும் இயங்கி வருகின்றார். அந்த சிந்தனையின் பாலான ஒருமிப்பே எனக்கும் அவருக்குமான நெருக்கத்தை அதிகமாக்கிற்று.

அன்று அவர் அரங்கத்தில் எழுதி வந்த அந்தக் கட்டுரைத் தொகுப்பு அண்மையில் ‘மட்டக்களப்பில் பொலிவுறும் பொதுசன நூலகம்’ என்னும் தலைப்பில் நூலுருவாக்கம் பெற்றது. அதனை கடந்த வருடம் ஜூலை மாதம் சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றத்துடன் இணைந்து ’கா’ இலக்கிய வட்டத்தினர் மட்டக்களப்பில் வெளியிட்டு வைத்தனர். அவ்வெளியீட்டு விழாவில்தான் அந்த மனிதரைக் கண்ணுறும் வாய்ப்பினைப் பெற்றேன்.



15.07.2023 அன்று மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம் நூல்வெளியீட்டில்

அவ்விழாவில் குறித்த நூலினை எழுதி வெளியிட்டதோடு மட்டும் அவர் திருப்திப்பட்டுக் கொண்டாரில்லை. அம்மேடையில் வைத்தே ஐம்பதாயிரம் நூல்களை மட்டக்களப்பு புதிய நூலகத்துக்காக தன்னால் பெற்றுத்தர முடியுமென வாக்குறுதியளித்தார். இவ்வாறாக எமது நூலகத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிவரும் பெரும் பணிகளுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகின்றோம் என்று செய்வதறியாது நின்ற எனக்கு குறைந்தபட்சம் அவரை வரவேற்று உபசரித்து, உரையாடி அனுப்பும் பாக்கியம் கிடைத்தது. வந்தாரை வாழவைக்கும் மட்டக்களப்புத் தமிழகத்தின் ஒரு புதல்வனாக அன்றைய பொழுதில் மன நிம்மதியடைந்தேன்.

செல்வராஜா ஐயாவைப் பொறுத்தவரையில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் சொல்வது போல அவர் 'உள்ளக்கமலம்' நிறைந்த மனிதரென்பதை நிரூபித்துள்ளார். கடந்த வருடம் மட்டக்களப்பில் வெளியீட்டு விழாவிலே வைத்து அவர் அளித்த வாக்குறுதியை வாய்மை தவறாது செவ்வனே நிறைவேற்றியுள்ளார். ஒரு வருட இடைவெளியில் எமது இனத்தின் எதிர்கால சந்ததிகளுக்காக ஒன்று நூறல்ல சுமார் நாற்பதாயிரம் (40 000) நூல்களை பிரிட்டனில் இருந்து இயங்கும் 'புக்ஸ் அப்ரோட்' தொண்டு நிறுவனத்தினூடாக இதுவரை அவர் பெற்றுக்கொடுத்துள்ளார். என்னைப்பொறுத்தவரையில் மட்டக்களப்பு நூலக வரலாற்றில் அதுவோர் இமாலயச் சாதனையாகும்.

இவ்வாறாக தமிழ் தொண்டாற்றிவரும் மதிப்புக்குரிய செல்வராஜா ஐயாவை வாழ்த்த எனக்கு வயதில்லையாயினும் அவர் பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி வாழவேண்டும், அவரின் தமிழ் ஊழியம் மென்மேலும் தொடர வேண்டும் என மனமார இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

20-08-2024 **சிவ.சந்திரகாந்தன் பா.உ**

## சிறந்த தமிழ்ப் புலமை உடையவர்; சுவைபட எழுதுவதில் வல்லவர்



**நா**ங்கள் இருவரும் 'செல்வராஜா' க்கள். இவர் N.செல்வராஜா, நான் M.T. செல்வராஜா. பல தடவைகள் முன்பின் அறிமுகமில்லாதவர்கள் எனது தொலைபேசியில் அழைத்து, நூலகத்தைப் பற்றிப் பேசியுள்ளனர். அண்மையில்கூட கனடா நாட்டிலிருந்து நூலகத்தைப் பற்றியும், நான் தனது நூலகத்திற்கு வந்ததாகவும், மட்டக்களப்பு நூலகங்களைப் பற்றிக் கதைத்ததாகவும் ஓர் அழைப்பு வந்தது. ஆனால் அது திரு. N.செல்வராஜா அவர்களுக்கான அழைப்பு என்பதைப் புரிந்துகொண்டேன். அழைத்தவர் என்னைச் சந்தித்திருக்கிறார், எனது தொலைபேசி எண்களைக் கேட்டு நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் அழைத்தவருக்கு எம்மிருவரையும் பிரித்துப் பார்க்க முடியவில்லை. காரணம் எனக்கும் தெரியவில்லை.

ஒருமுறை முகநூலில்கூட பிரபல்யமான ஒருவர் என்னை திரு. N.செல்வராஜா என்று எண்ணித் தன் கருத்தைப் பதிவிட்டிருந்தார். இப்படியாக இந்த நூலகவியலாளர் பெறவேண்டிய சில பாராட்டுக்களும், புகழுரைகளும் எனக்கும் வந்து சேர்கின்றன. இதற்கெல்லாம் இந்தப் பெயர் மாறாட்டம்தான் காரணம்.

இவர் எழுத்துலகிற்கு ஆற்றுகின்ற பணிகள் பல. அதில் 'நூல்தேட்டம்' முக்கியமானதொன்று. நூல்தேட்டத்திற்கான தேடலின்போதுதான் இவருடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

இவருடைய ஆக்கங்களைப் படித்தும், நேர்காணல்களைக் கேட்டும் நான் வியந்திருக்கிறேன். நான் எழுதிக்கொண்டிருக்கும் 'உரும்பிராய் சரிதம்' நூலுக்கும் N.செல்வராஜா அவர்கள் விபரங்கள் தந்து உதவினார்.

நூலகவியலாளர்கள் மொழியின் காவலர்கள். நூல்களை நூலகங்களில் பேணிப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் சிறந்த ஆய்வாளர்களாகவும், மொழி ஆளுமை உள்ளவர்களாகவும், எழுத்தாளர்களாகவும் விளங்குகிறார்கள். திரு.ந.செல்வராஜா அவர்கள் சிறந்த தமிழ்ப்புலமை உடையவர். எதையும் அலசி ஆராய்ந்து, சுவைபட எழுதுவதில் வல்லவர். இவரின் பணிகள் தனித்துவமானவை.

திரு.ந.செல்வராஜா அவர்கள் அகவை எழுபதை அடைந்தாலும் அவரின் பணிகள் என்றும் இளமையாகவே இருக்கும். இன்னும் பல அகவைகள் கண்டு, பணிகள் புரிய வாழ்த்துகிறேன்.

அன்புடன்
M.T. **செல்வராஜா**

# உலகத் தமிழர்களின் அரும் பொக்கிஷம்



ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இருந்து எத்தனையோ தமிழ்ப் படைப்புக்கள் வருடாவருடம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆவணமாக்கும் பணியை தனி ஒருவராக நின்று அர்ப்பணிப்புடன் செய்து வருபவர்தான் எங்கள் செல்வராஜா அவர்கள்.

நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் முக்கிய சாதனங்கள் என்பதை நாமறிவோம். இத்தகைய பதிவுகள் நாகரிகமான ஒவ்வொரு இனத் திற்கும் முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

இத்தகைய தேடல்களை ஆவணப்படுத்தும் முயற்சிகள் தமிழ் இனத்தில் மிக அரிதாகவே காணப்படுகிறது. ஒரு நாட்டின், ஒரு தேசியத்தின் அறிவேடுகளை பதிவு செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவையே உலக நாடுகளில் இயங்கி வருகின்ற தேசிய நூலகங்களும்,ஆவணக்காப்பகங்களுமாகும்.

ஈழத்தமிழர்கள் இன்று தமக்கென்று ஒரு நாடின்றி உலகமெல்லாம் பரந்து வாழ்கின்ற நிலையிலும் ஆக்க இலக்கியப் படைப்புக்களை படைத்த வண்ணமே இருக்கிறார்கள். முக்கியமாக பல படைப்புக்கள் ஈழத்தை விட தமிழ்நாட்டிலேயே பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு மற்றைய நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் ஆவணப்படுத்தல் என்று வரும்பொழுது

மிகவும் கடினமானதும் பெருமளவு நேரத்தை செலவழிக்க வேண்டிய பொறுப்புமிக்க ஒரு சேவையாகும்.

ஒரு பல்கலைக்கழகமோ, ஆவணக்காப்பகமோ செய்யவேண்டிய சேவையை தனிமனிதனாக தன் சொந்தப்பணத்தில் நூல்தேட்டம் என்ற நூல் விபரப்பட்டியல்களை இத்தனை காலமும் செய்து வருகிறார் நூலகவியலாளர் செல்வராஜா.

2002இல் நூல்தேட்டம் பெரும்தொகுப்பின் வருகை ஆய்வாளர்களுக்கிடையே ஒரு புது வெளிச்சத்தை பாய்ச்ச முனைந்தது. 2024ஆம் ஆண்டு வரை பதினேழு தொகுதிகளில் ஈழத்தவர்களின் 17,000 படைப்பாக்கங்களை தன்னகத்தே குறிப்புரைகளுடன் நூல்தேட்டம் கொண்டிருக்கிறது.

இவரது ஆவணமாக்கல் சேவையைப் பாராட்டி ‘‘சிறந்த ஆவணமாக்கல் சேவையாளர் விருது’’ இலண்டன் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகத்தால் வழங்கப்பட்டது. இது தவிர சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய விருது போன்ற பல விருதுகளுக்கு சொந்தக்காரரான இவர் அகவை எழுபதை அடைந்துவிட்ட இந்நாளில் எனது பிறந்தநாள் நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு இன்னும் பல்லாண்டு காலம் இந்தப்பணியை செய்ய இறைவன் அருள்பாலிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**வவுனியூர் இரா உதயணன்**

# மட்டக்களப்புப் பொதுநூலக விருத்தியில் நூலகர் என் செல்வராஜா



நூல் தேட்டம் செல்வராஜா அவர்கள் யாழ்ப்பாணத்தில் நூலகராகப் பணியாற்றிய பின் புலம்பெயர்ந்து ஈழத்திலிருந்து வெளிவந்த நூல்களைத் தேடி அவற்றைப் பட்டியலிட்டு ஆவணப்படுத்துகின்ற பெரும்பணியைச் செய்து கொண்டிருப்பவராக அறிந்திருந்தேன். புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் தங்களது முன்னைய பணிகளை மறந்து புலம்பெயர் தேசத்தின் பணப் பொருளாதாரத்தில் கரைந்து மூழ்கிப் போபவர்களாக இருக்க செல்வராஜா அவர்கள் புலம்பெயர்ந்த போதும் தனது தொழிற் கடமையை, அதன் தொடர்ச்சியை எவ்வித சம்பளமுமின்றி தமிழ் மக்களுக்காக ஆற்றிக் கொண்டு வருகிறார் என்பதில் ஒரு மரியாதை அவர் மேல் உருவாகியிருந்தது.

இவர் அரங்கம் பத்திரிகையில் ‘மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம்’ எனும் தலைப்பில் தொடர் கட்டுரையொன்றினை எழுதத் தொடங்கினார். அரங்கம் பத்திரிகை கிழக்கின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தனித்துவங்களையும் வெளிப்படுத்துவதற்காக திரு. சீவகன் பூபாலரட்ணம் அவர்களால் சொந்த நிதியில் வெளியிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டு வந்த பத்திரிகையாகும்.

அரங்கம் ஒரு பிராந்தியப் பத்திரிகையாக இருந்ததினால் அந்தப் பிராந்தியத்தினுடைய தேவைகள், பிரச்சினைகள், சமூக தனித்துவங்கள், அவர்களுடைய அரசியல் நோக்குநிலைகள் என்பன

வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் சீவகன் மிகக் கவனமாகத் தொழில்பட்டார். இதன் பொருட்டு மட்டக்களப்பை மிக நுணுக்கமாக நோக்கி தான் நோக்கிய விடயங்கள் தொடர்பாக யார் யாரைக் கொண்டு எழுத முடியுமோ அவர்களை அணுகி அவர்களிடம் இருந்து கட்டுரைகளைப் பெற்று வெளியிட்டுக் கொண்டு வந்தார். இவ்வாறு அவருடைய ஒரு நோக்கு நிலையில் அவதானிக்கப்பட்டதே மட்டக்களப்பு பொதுநூலகக் கட்டிடமாகும்.

பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தன் அவர்கள் கிழக்கில் முதலமைச்சராக இருந்த போது ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு பொதுநூலகக் கட்டிடம் அரசியல் இழுபறியில் முடிவுறாமல் இருந்த போது, அரசியல் நிலை கடந்து அந்த நூலகம் இன்றைய நவீன தேவைப் பாடுகளையும் தொழில்நுட்ப வசதிகளையும் அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வாசகர்களுக்கு நிறைவான சேவையை வழங்கலாம் என்ற ஒரு தேவைப்பாட்டின் நிமித்தம் நூலகம் தொடர்பான அனுபவமும் அறிவும் வாய்ந்த திரு என். செல்வராஜா அவர்களை சீவகன் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க அரங்கத்தில் தனது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் கொண்ட கட்டுரையினை தொடராக எழுத ஆரம்பித்தார் என்பதை அறிய முடிந்தது.

இந்தத் தொடரினூடாக பொதுமக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் நூலகம் என்பது தனியே கட்டிடங்களிலோ அல்லது நூல்களின் எண்ணிக்கையில் மாத்திரமோ தங்கியிருப்பதல்ல அதற்கு மேலால் அவற்றினுடைய அமைப்பு, அந்த அமைப்பின் ஒழுங்கு, அது செயற்படும் முறை, வாசகர்களுக்குரிய வசதிகள், வாய்ப்புகள் என பலவகைகளில் தங்கியிருக்கின்றன என்ற விடயம் புலனாகியது.

பிள்ளையான் ஒரு தமிழினத் துரோகியாக தமிழ் தேசிய அரசியல் பேசுபவர்களால் முத்திரை குத்தப்பட்டிருக்கின்ற அரசியல் களத்திலும், அரங்கம் மட்டக்களப்பு பிரதேசவாதப் பத்திரிகை என மாற்றுச் சிந்தனைகளை மறுப்பவர்களால் தூற்றப்படும் சூழலிலும், செல்வராஜா அவர்கள் இவை எவற்றையும் பொருட்படுத்தாது, இந்த

குறுகிய அரசியல் நலன்களைக் கடந்து தனது அறிவு, அனுபவம், ஆற்றல் என்பன மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற பரந்த சிந்தனைத்தளத்தில் நின்று நூலகம் தொடர்பான கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதிவந்தார். செல்வராஜா அவர்களுக்கு இருந்த மக்கள் நலனையும் சமூகப் பொறுப்பையும் தன்னலமற்ற குணத்தினையும் அவற்றுக்காக எதையும் எதிர்கொள்வதற்குத் தயாரான அவருடைய துணிவையும் இலங்கையர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

அவருடைய அந்தத் தொடர் கட்டுரை நூலகத்தின் அமைப்பு, நூலகத்தின் முக்கியத்துவம், புதிய கட்டிடத்தின் நூலகப் பிரிவுகள், மாற்றுத் திறனாளிகளின் தேவைகள், இரவல் வழங்கும் மண்டபமும் வாசிப்பு முனையமும், இரவல் வழங்கும் சேவை, சுவடிகள் காப்பகம் என நூலகத்தைப் புரிந்து கொள்வதற்கான அடிப்படைக் கருத்துக்களாகவும் வழிகாட்டியாகவும் கொண்டமைந்த கட்டுரைகளாக அமைந்திருந்தன.

இந்தக் கட்டுரைத் தொடரின் முக்கியத்துவம் கருதி இந்தக் கட்டுரைகளின் தொகுப்பாக ‘மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம்’ எனும் இவரின் நூல் வெளிவந்தது.

இந்த நூல் வெளியீட்டின் போது மூன்று நிகழ்வுகள் இடம் பெற்றன.

1. திரு. செல்வராஜா அவர்கள் மட்டக்களப்பு பொது நூலகத்துக்கு மூன்று இலட்சம் புத்தகங்கள் தேவை அதில் ஓர் இலட்சம் ஆங்கிலப் புத்தகங்களை தான் பெற்றுத் தருவதாக மேடையில் வாக்குறுதியளித்தார்.
2. மட்டக்களப்பு நூலகத்துக்கு நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் அமைப்பு நிறுவப்பட்டது.
3. பேராசிரியர் சி.மௌனகுரு தனது சேமிப்பில் உள்ள புத்தகங்களை மட்டக்களப்பு நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்வதாக அறிவித்தார்.

இறுதி இரண்டு நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் அல்லது செயல்படுத்துகை எவ்வகையில் உள்ளது என்பதை அறிய முடியவில்லை. ஆயினும்

தான் வழங்கிய வாக்குறுதியை காற்றில் பறக்கவிடாது தனியொருவராக அல்லும் பகலும் உழைத்து ஓர் இலட்சம் நூல்களைச் சேகரித்து அனுப்பியுள்ளமை கை தட்டலுக்கான ஒரு மேடைப் பேச்சாக இல்லாமல் கொடுத்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஓர் இலட்சம் நூல்களைத் சேகரிப்பது என்பது குவிந்து கிடக்கும் நூல்களை அள்ளிக் கொண்டு வருவதல்ல, அதற்கு அர்ப்பணிப்பான உழைப்பும் தேடலும் தொடர்புகளும் அவசியமாகும். இந்த அனைத்தையும் கொண்டுதான் அவர் ஓர் இலட்சம் புத்தகங்களை சேகரித்து மட்டக்களப்புக்கு அனுப்பியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் ஸ்கொட்லாந்தில் இயங்கும் புக்ஸ் எப்ரோட் (Books Abroad) எனும் தொண்டு நிறுவனத்தின் இணைப்பாளர்களுள் ஒருவராகப் பணியாற்றும் ஒரேயொரு தமிழராகவும், இலங்கையராகவும் 2003முதல் இயங்கி வருகிறார். இதன் காரணத்தினால் இந்நிறுவனத்துக்கு மட்டக்களப்பு பொதுநூலகம் பற்றியும் அதற்கு நூல்களின் தேவைகள் பற்றியும் எடுத்து விளக்கி இந்நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்வதற்கான அனுமதியினை மிகச் சிரமத்தின் மத்தியில் பெற்றிருக்கின்றார். அத்தொண்டு நிறுவனம் 40 அடி கொண்டெய்னர் ஒன்றில் 38 பலட் புத்தகம் வழங்குவதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். ஆயினும் பாவித்த புத்தகங்களுக்கு இலங்கை அரசு VAT அறவிடுவதை புக்ஸ் எப்ரோட் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் மட்டக்களப்பு கொன்டெய்னர் இறக்குவதில் ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இவற்றை விட ஒரு கொன்டெய்னர் அனுப்ப புத்தகங்களின் பெறுமதியை விட கப்பல் போக்குவரத்து செலவினை ஈடுசெய்ய 8000 பவுண்ட் தேவைப்பட்டிருந்தது. அதாவது இலங்கை ரூபாவில் அண்ணளவாக 2,800,000 ஆகும். இந்தப் பணத்தினை குறிப்பிட்ட

தொண்டுநிறுவனம் முழுமையாக பொறுப்பேற்க மாட்டாது என்ற சூழலில், இத்தொகையினைச் சேர்ப்பதற்காக செல்வராஜா அவர்கள் புக்ஸ் எப்ரோட் அமைந்துள்ள அபர்டீன்ஷெயரில் உள்ள 17 மிகப்பெரும் பணக்காரர்களின் தனியார் மாளிகைத் தோட்டங்களை பொதுமக்கள் பார்வையிட புக்ஸ் எப்ரோட் நிர்வாகத்துடன் இணைந்து அவர்களிடம் அனுமதியினைக் கோரியிருக்கிறார். அவர்களில் 12 பேர் அதற்கு ஒத்துழைத்து தங்கள் தனியார் பூங்காக்களை வெளியார் ஒரு நாள் மட்டும் பார்வையிட அனுமதியை வழங்கினர். பார்வையாளர்களிடம் ரிக்கட் விற்று அவர்களுக்கு அங்கு பார்பக்கியூ, சான்விட்ச் போன்றன பரிமாறப்பட்டு மிகுதிப் பணத்தினை கொண்டய்னர் அனுப்புவதற்கு திரட்ட முடிந்திருக்கிறது. எங்கோ ஒரு நாட்டிலுள்ள 12 பணக்காரர்களின் வீட்டுத்தோட்டத்தை மட்டக்களப்பு பொது நூலகத்துக்காக திறந்துகாட்டி நிதி வசூலிப்பது என்பது இலகுப்பட்ட காரியமல்ல என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அர்ப்பணிப்பான கடினமான காரியத்தினை மட்டக்களப்புப் பொதுநூலகத்துக்காக அவர் ஆற்றியிருப்பது இந்த பிரதேசத்து மக்களின் அறிவு வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அவர் கொண்டிருக்கும் அக்கறையினைக் காட்டுகின்றது.

மேலும் அங்குள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் சீனமொழிப் பிரிவு மூடப்படுவதால் அங்கிருந்த சீனமொழி மூல நூல்களையும் பெற்றிருக்கின்றார். அந்த நூல்கள் மட்டக்களப்பு பொது நூலகத்துக்கு வந்துள்ளன. செல்வராஜா அவர்களின் ஆலோசனையின் பெயரில் மட்டக்களப்புப் பொது நூலகத்தில் சீனமொழிப் பிரிவு ஒன்று தனியாக ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இலங்கையில் ஒரு நூலகத்தில் சீனமொழிக்கென்று தனியான ஒரு பிரிவு ஆரம்பிக்கப்படுவதும் மட்டக்களப்பில் தான் என்ற பெருமையும் இதனால் உருவாகியிருக்கிறது.

‘மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம்’ எனும் கட்டுரைத் தொடரை எழுதி அதனைப் புத்தகமாக்கியதோடு மட்டும் நின்றுவிடாமல் நூலகத்தை நூல்களால் பொலிவு பெற வைப்பதற்காக செல்வராஜா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மட்டக்களப்பு

மக்களால் என்றும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

கிழக்கில் கிழக்குப் பல்கலைக்கழகமும் தென்கிழக்குப் பல்கலைக் கழகமும் அமையப் பெற்றிருக்கும் சூழ்நிலையில் இப்பல்கலைக் கழக மாணவர்களினதும் ஆராய்ச்சியாளர்களினதும் அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இந்நூலகம் விளங்கும் எனலாம். அதுவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பட்டப்பின்படிப்பு பீடத்தில் ஆய்வுக்காக இணைந்திருக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்களின் ஆய்வு முயற்சிகளுக்கு இந்நூலகம் பெரிதும் துணைபோக வேண்டும்.

யாழ்ப்பாண புலமைப் பாரம்பரியத்தின் ஓர் அடையாளமாக யாழ்நூலகம் இருப்பது போன்று மட்டக்களப்புப் பொது நூலகம் மட்டக்களப்புப் புலமைப் பாரம்பரியத்தின் ஓர் அடையாளமாகத் திகழ வேண்டும். அப்போதுதான் இந்நூலகத்தினை இந்தளவுக்குப் பெரிதாகத் திட்டமிட்டு கட்டுவதற்கு உழைத்த சிவநேசதுரை சந்திரகாந்தன், இந்நூலகத்துக்கு இவ்வளவு நூல்களைக் கொண்டு வந்து சேர்த்த நூலகவியலாளர் என்.செல்வராஜா, இந்நூலகத்தினூடு இப்பிரதேச மக்கள் குறிப்பிடத்தக்க அறிவுச் சாதனைகளை அடைய வேண்டும் என எதிர்பார்த்துத் தொழில்படும் சீவகன், இவர்களைப்போலவே இந்த நூலகத்தையும் நூல்களையும் நேசித்து அதன் விருத்திக்கு உழைத்துக் கொண்டிருக்கும் இந்த நூலகத்தின் நூலகர் சிவராணி, மற்றும் இலைமறை காய்களாக இந்நூலகத்துக்காகப் பாடுபடும் அனைத்து நல்லுள்ளங்களினதும் உழைப்பும் அர்ப்பணிப்பும் அர்த்தமுடையதாக அமையும் எனலாம்.

**கலாநிதி சு.சிவரெத்தினம்**

# சமகாலத்தில் வாழும் நம்பியாண்டார் நம்பி



நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களை மிக நீண்ட காலமாக அறிவேன். அவர் ஆற்றும் பணி, தன்னை முதன்மைப்படுத்தாது. எமது சமூகத்தின் படைப்பாளிகளை முதன்மைப்படுத்தி, அவர்களது படைப்புகளை முறையாக ஆவணப்படுத்தும் முயற்சியில் நீண்டகாலம் பயணிப்பதாகும்.

'நூல் தேட்டம்' என்னும் பெருநூலை பல தொகுதிகளாக வெளியிட்டு வந்தவர். பொதுவாக சிறுகதைத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு, நாவல்கள் இவற்றை ஒருவர் எழுதுவார். அவர் எவ்வளவோ கடினமான பாதைகளைக் கடந்து அவற்றை சந்தைப்படுத்துவார். ஓரளவு வெற்றியும் காண்பார்.

மற்றவர்கள் படைப்புகளை ஆவணப்படுத்தும் திரு.செல்வராஜா அவர்கள், தனக்கான நேரத்தை முழுமையாக உங்களுக்காக செலவு செய்பவர். ஒரு விழாவுக்குப் போனால் அவர் தங்குமிடத்திலும் ஓய்வாக இருக்கமாட்டார்.

அவர்களிடம் இருக்கும் ஈழத்தவர்கள் புத்தகம் ஏதும் தான் பதிவு செய்யவில்லை என அறிந்தால் போதும்!. உடன் புத்தகத்தை தான் வைத்திருக்கும், அளவுகோலால் அதன் நீளம் அகலம் எல்லாம் அளந்து, நூலின் பெயர் அதன் பக்கங்கள், தாளின் வகை என யாவற்றையும் பதிவு செய்து, நூல்தேட்டத்தில் இடம்பெறவைப்பார்.

தேடி எடுத்துத் திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி என இவரையும் இன்றைய நம்பியாக நம்பலாம். ஒருவரது வரலாறு அல்லது ஒரு நூல் என்றாலும், அவர் முழுமையான தரவுகளுடன் பதிவு செய்வார்.

எனக்கு ஒரு முறை 'வெற்றிமணியின் வெளியீட்டுப் பாரம்பரியம்' என்ற ஒரு நீண்ட கட்டுரையை எழுதித் தந்தார். அதில் உள்ள விபரங்களில் எனக்கே தெரியாதவை பல இருந்தன. எனது தந்தையின் காலம் முதல் எனது காலம் வரை அக்கட்டுரையில் அமைந்தது.

தற்போது தாய்மண்ணில் கிழக்கு மாகாணத்தில் ஒரு நூலகம் அமைப்பதில் பெரு ஆர்வத்துடன் பணியாற்றி வருபவர். பொதுவாக அவர் தன் வாழ்வில் பெரும்பகுதியை தேடுதலில் கழிக்கிறார். அவற்றை பதிவிடுவதில் களிப்புறுகிறார்.

2019ஆம் ஆண்டு வெற்றிமணி பத்திரிகை தனது வெள்ளிவிழாவை யேர்மனியில் கொண்டாடிய வேளை நூலகவியலாளர் திரு. என்.செல்வராஜா அவர்களுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்', விருதினை விழாவில் வழங்கிக் கௌரவித்தோம்.

வெற்றிமணி பத்திரிகை (யேர்மனி) எடுத்த பல விழாக்களில் கலந்து கொண்டவர் என்ற மகிழ்வோடும் எழுபதாவது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

என்றும் தமிழுடன்

**மு.க.சு.சிவகுமாரன்**
வெற்றிமணி ஆசிரியர் (யேர்மனி)
Vettimaniy@hotmail.com

**யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்**

Tamilischer Schriftsteller Verein - Deutschland

Tamil Writers Association - Germany

# தமிழ்மொழிக்கும் தமிழினத்துக்கும் கிடைத்த பெருங்கொடை



திருவாளர் நடராஜா செல்வராஜா (நூல்தேட்டம்) அவர்களுக்கு அகவை எழுபது என்பதை அறிந்து வாழ்த்து எழுதுவதில் மட்டற்ற மகிழ்வு கொள்கின்றோம். யேர்மனி நாட்டில் முதன் முதலில் தோன்றிய யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பினாலும், யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை என்ற அமைப்பினாலும் யேர்மனிக்கு வரவழைக்கப்பட்டுச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டவர் என்பது, அவரது தமிழ்த்தொண்டுக்கும், பணிக்கும், சேவைக்கும் வழங்கிய மதிப்புமிகு பெருமை என்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

திருமிகு என்.செல்வராஜா அவர்கள் தமிழ்மீதும், தமிழர் மீதும் அபாரமான பற்றுக் கொண்டவர். அவர் நூலகத்துறையில் பாண்டித்தியம் பெற்றவர். தனது தொழில் முறையிலும், தனிப்பட்ட தன்மைகளிலும் தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கும் அளப்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார் என்றால் மிகையாகாது. நூலாக்கங்கள் செய்வதற்கும், நூல்களை பதிப்பிப்பதற்கும், வெளியீடு செய்வதற்கும் உதவிகளை செய்துள்ளார். பல அரிய வரலாற்று செய்திகளைத் திரட்டி கட்டுரைகள், ஆய்வுரைகள் என எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்களால் எழுதி வெளிவந்த நூல்களைத் தேடிப்பெற்று, அவற்றின் விபரங்களை பதிவுக்குள்ளாக்கிய 'நூல்தேட்டம்' என்ற தொகுப்பு வினையாற்றல், யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத சாதனைச் சிறப்பாகும்.

2001ஆம் ஆண்டு தொடக்கம் எம்முடன் மிகவும் நெருக்கமான உறவினைக்கொண்டு செயற்பட்டு வருகின்றார். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆலோசகராகச் செயற்பட்டு பல திறமையான செயற்பாடுகளுக்கு ஊக்கம் தந்தவர். 'நூல்தேட்டம்' தொகுப்பு நூலில் பல பகுதிகளை நாம் பெற்று பகிர்வு செய்துள்ளோம். யேர்மனி தமிழ்க் கல்விச் சேவையின் ஆண்டு விழாவிற்கு அழைத்துச் சிறப்பாக மதிப்பளித்துக் கௌரவித்தோம். பல ஈழத்து நூல்களை அவரிடம் கொடுத்துப் பதிவுக்கும் உள்ளாக்கியுள்ளோம்.

நூலகவியலாளர், எழுத்தாளர், ஆய்வாளர், பதிப்பாளர் போன்ற பல்வேறு துறைகளில் செயலாற்றும் திருவாளர் நடராஜா செல்வராஜா அவர்கள் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும் கிடைத்த பெரும்கொடை. அவர் நீண்ட நெடுங்காலம் நலமுடனும், வளமுடனும் வாழ்ந்து தமிழ்ப்பணி ஆற்றவேண்டி வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு.

**பொ.சிறீஜீவகன்**
தலைவர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்
தலைவர், யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - ஐரோப்பா

"தாயகத்தின் புகழ்காத்து தரணியிலே தொண்டு செய்வோர் சாவதில்லை எந்நாளும்"
புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், யேர்மனி
PUNGUDUTIVU THONDAR THIRUNAVUKKARASU SARVODAYAM
Unterstützungsverein Deutschland e.V. Ennepetal VR: 2934
Welfare Association, Germany
Gustav-Bohm Straße 67, 58256 Ennepetal
E-Mail: ptt.sarvodayam@hotmail.com



என்னெப்பெற்றால், 10.09.2024
யேர்மனி

# மேலும் அறவழிச்சேவை தொடரட்டும்

நூலகவியலாளராகவிருந்து புங்குடுதீவு வட இலங்கை சர்வோதயத்துடன் தொண்டர் திருநாவுக்கரசு அவர்களின் அமைப்பின் கீழ் நூல் நிலையத்தினை உருவாக்கி, அங்கு சிறப்பான வாசகர்களை உருவாக்கியது மட்டுமல்லாமல், பன்னிரெண்டு வட்டாரங்கள் அனைத்திலும் கிளை நூலகங்களை நிறுவி இளைஞர்களையும், யுவதிகளையும் திரட்டி அவர்களிடையே வாசிக்கும் ஆற்றலை உருவாக்கிய திரு. என் செல்வராஜா அவர்களின் உன்னத பணியினை நன்றியுடன் வியந்து பாராட்டுகின்றோம். சர்வோதய வளாகத்தில் பணியாற்றிய பணியாளர்கள், பெரியோர்கள், சிறியோர் வரை எல்லோராலும் இவர் ''செல்வா அண்ணர்'' என்றே அன்புடன் அழைக்கப்பட்டார்.

யேர்மனியில் தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தினால் நடாத்தப்படும் கிராமிய பூபாளம் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிப்பது மட்டுமல்லாது, அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் உதவி செய்தமைக்கும் தொண்டரின் வரலாற்று, சிறப்புமிக்க நூலினை எழுதி 'ஒரு தொண்டரின் பாதை' என்று பெயரிட்டு வெளியிட்டு உலகம் முழுவதும் தொண்டரின் வரலாற்றினையும், சேவையையும் உணர்ந்து கொள்ளவைத்தமைக்கும் நன்றிகளை வட இலங்கை சர்வோதயக் குடும்பமும் எங்களது கிராம மக்களும் வணங்கி தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுவரை 73 நூல்களை எழுதி, பதினேழாயிரம் தாயக நூல்களை ‘நூல்தேட்டம்’’ தொகுதிகளின் வழியாக ஆவணப்படுத்தி, தொடர்ந்து அவ்வழியில் செயலாற்றி வரும் தங்களது மகத்தான பணி போற்றுதலுக்குரியது.

செல்வாண்ணாவின் அகவையை நெஞ்சகத்தில் நிறுத்தி மேலும் தூய அறவழிச்சேவை தொடர நூற்றாண்டு காலம் நலத்துடன், வளமுடன் வாழ வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.


நன்றியுடன்
**சிவஞானம் சதானந்தன்**
ஒன்றியத்தலைவர்

**மகாலிங்கம் கணேசு**
வட இலங்கை சர்வோதய சர்வதேச ஒருங்கிணைப்பாளர்



29.09.2017 அன்று ஜேர்மனி என்னப்பெட்டால் நகரில்
திரு. என். செல்வராஜாவின் ‘ஒரு தொண்டரின் பாதை’’
நூல் வெளியீட்டின் போது மதிப்பளிப்பு

## ஈழத்து எழுத்தாளர்களை உலகெங்கும் அறிமுகம் செய்தவர்



ஒருவரது அகவை நாளில் அவரது பணிகளை நினைவூட்டி வாழ்த்துவது அவரை மகிழ்விக்கும் என்பது உண்மை.

அந்தவகையில் எழுபதாவது அகவையை அடைந்துள்ள என்.செல்வராஜா அவர்களின் பணிகளைப் பாராட்டிப் பட்டியலிடுவ தென்றால் அதற்காக ஒரு நூல்தேட்டம் போன்ற நூல் அச்சிடுவதே சிறந்ததாக அமையும். உலகின் பல நாடுகளுக்குப் பயணிக்கும் இவர், பிரான்ஸ் நாட்டுக்கும் பல தடவைகள் வருகை புரிந்துள்ளார்.

அவ்வாறு அவர் வருகை தரும் ஒவ்வொரு வேளையிலும் பரிஸ் லா சப்பலில் அமைந்துள்ள எனது சிறி பாரதி அச்சகத்திலுள்ள நூலகத்துக்கும் வருகை தருவார்.

சம்பிரதாயபூர்வமாக நலன் விசாரித்துக்கொண்டதும், அவரது பார்வை புத்தகங்களை நோக்கியே செல்லும். பரிஸுக்கு வருகை தருவோர் இங்குள்ள சுற்றுலாத்தலங்களை நோக்கியே செல்வார்கள், அங்கே அவர்களது நேரத்தைச் செலவிடுவார்கள். ஆனால், செல்வராஜா அவர்கள் ஈழத்து நூல்களைத் தேடியே தன் பயணங்களை மேற்கொள்வதை நேரடியாகப்பார்த்து அறிந்து கொண்டேன்.

பரிஸில், குறிப்பாக லா சப்பல் பகுதிக்கு யார் வருகை தந்தாலும் அவர்களை உணவகங்களுக்கு அழைத்துச்சென்று உபசரிக்கத் தவறுவதில்லை. குறைந்த பட்சம் சிற்றுண்டி, தேனீர் அருந்துவோம்.

''தேனீர் அருந்தி விட்டுவருவோம் வாருங்கள்'' என அழைத்த வேளையில், ''நன்றி ராசா, அந்த நேரத்தில் இரண்டு புத்தகங்கள் பதிந்துவிடுவேன்'' எனக் கூறிக்கொண்டு புத்தகங்கள் உள்ள பகுதிக்குச் சென்று அவரது பணியை ஆரம்பித்து விடுவார்.

எனது சிறி பாரதி நூலகத்திலும், எனது தனிப்பட்ட பாவனையில் இருந்த ஈழத்துப்படைப்பாளிகளின் நூல்களையும் பதிவுக்காக வழங்கினேன். ஒரு சில நூல்களை அன்பளிப்பாக வழங்கினேன்.

பிரான்ஸில் வெளிவந்த, யாரிடமும் பெறமுடியாத சில அரிய நூல்களின் விபரங்களைச் சிறி பாரதி நூலகத்தில் பெற்றுக்கொண்டதாக மகிழ்வு தெரிவித்திருந்தார். என்.செல்வராஜா அவர்களின் நூலகப்பணிக்கு எழுத்தாளர்கள், வாசகர்கள் ஆதரவளிக்க வேண்டும். படைப்பை வெளிக்கொண்டுவரும் படைப்பாளர்கள் தங்கள் படைப்பில் ஒரு பிரதியை செல்வராஜா அவர்களுக்கு அனுப்பி வைத்தால், அவரும் சுற்றுலாத்தலங்களில் நேரத்தைச்செலவிட முடியும்.

ஒரு சில எழுத்தாளர்கள் கவனமெடுக்கிறார்கள், ஆனால் எல்லோரும் கவனம் செலுத்தினால் அவரது பணி இலகுவாக்கப்படும். அகவை 70. இதற்குள் 70 நூல்களையும் என்.செல்வராஜா அவர்கள் எழுதி வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது.

70 கடந்தும் அவரது நூல்தேட்டப்பணி தொடர இனிய பிறந்தநாள் வாழ்த்துகளையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் தமிழ்ப்பணிக்கு தலைசாய்த்து வணங்குகிறேன்.

**இரா.சிறிதரன்**
உரிமையாளர்
சிறி பாரதி அச்சகம் - சிறி பாரதி நூலகம்
பரிஸ் - பிரான்ஸ்.

**EXPRESS NEWSPAPERS**
(CEYLON)(PVT) LIMITED PV3125

# எழுத்துப்பணி, நூலகப்பணி தொடரவேண்டும்



ஈழத்து நூல்கள் தொடர்பான தேடலில் இன்று தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் என்.செல்வராஜா அவர்கள் அடிப்படையில் நூலகராகத் தனது பயணத்தை ஆரம்பித்தவர். உலகில் பரந்து வாழும் ஈழத்துப்படைப்பாளிகள் தாம் வாழும் நாடுகளில் தங்களின் படைப்புகளை வெளியிடுகிறார்கள். அவர்களது அந்தப்படைப்புக்களின் விபரங்களை 'நூல்தேட்டம்' எனும் அவரது தொகுப்பில் பதிவிடுகிறார். இந்தத்தொகுப்பு இதுவரை 17 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்களின் விபரங்கள் பதிவாகியுள்ளன. இது நூலகவியலாளர் எந்தப் பிரதிபலனையும் எவரிடமிருந்தும் எதிர்பாராமல் ஆற்றும் அளப்பரிய இலக்கியப் பணி. எழுத்தாளர்கள் நூல்களை எழுதி வெளியிட்டால் மாத்திரம் போதாது, அவை பற்றிய விபரங்கள் வாசிக்கும் ஆர்வலர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். நூலகங்களில், பல்கலைக்கழகங்களில் நூல்கள் பற்றிய விபரங்கள் இருக்க வேண்டும். அந்த அரும் பணியை என்.செல்வராஜா அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறார்.

எமது வீரகேசரி பத்திரிகையில் முன்னர் அவ்வப்பொழுது அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. இப்பொழுது, 2023 முதல் வாரம் தோறும் எமது வாரமலரில் அவர் எழுதி வருகிறார். ஒரு கட்டுரை பத்திரிகைக் காரியாலயத்துக்கு எப்பொழுது கிடைக்க வேண்டுமோ அதற்கு முன்னராகவே செல்வராஜாவின் கட்டுரை எமது பகுதிக்கு வந்து சேர்ந்துவிடும். ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை வெளிவருகிறது. அதில், அவரின் கட்டுரை பிரசுரமாகின்றது.

அந்தக்கட்டுரையை அவர் பத்திரிகையில் வாசிப்பதற்கு முன்னரேயே அடுத்த வாரத்துக்குரிய கட்டுரையை அனுப்பி வைத்து விடுவார். பத்திரிகைப்பணியில் இருப்பவர்களுக்கு எந்த விதமான சிரமமும் ஏற்படுத்தாமல், அவர் எழுதும் கட்டுரைக்குத் தேவையான படங்கள், விபரங்கள் யாவும் ஒருங்கே அனுப்பி வைப்பார். குறிப்பாகக் கட்டுரையில் எழுத்துப்பிழைகள் இன்றி மிகக் கவனமெடுத்து கட்டுரை எம்மை வந்து சேரும். பத்திரிகைத் துறைப் பணியாளர்களின் வேலைப் பழுவை அறிந்தவராக செல்வராஜா அவர்கள் செயற்படுவது எமக்கு மகிழ்வைத் தருகிறது.

நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் அகவை 70 அடைந்திருக்கிறார். அவருடைய எழுத்துப் பணி, நூலகப்பணி என்பன பல்லாண்டுகள் தொடர வேண்டும். அதற்கு அவர் உடல் ஆரோக்கியத்துடன் திகழ வேண்டும் என வாழ்த்துகிறோம்.

**எஸ்.ஸ்ரீ கஜன்**
பிரதம ஆசிரியர்
வீரகேசரி



# நூல்களுடன் வாழ்ந்து வரும் நூலகவியலாளர்

தமிழ் மக்களின் புத்தக வாசிப்புத் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் நிகழும் காலம். நூல்கள் வாசிக்கப்படல் வேண்டும் என்பதற்காக எவ்வளவோ பணிகள் ஆற்றப்படுகின்றன. நூல்களை எழுதும் படைப்பாளிகள் தமது நூல்களை வாசகர்களிடம் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றார்கள். வெளியீட்டுவிழாக்கள், அறிமுக விழாக்களில் மிகச்சிலரே வெற்றி பெறுகின்றார்கள். பெரும்பாலானவர்கள் தமது வெளியீடுகளை வீடுகளில் தேக்கி வைத்திருக்கும் நிலையே காணப்படுகிறது. மக்களின் வாழ்க்கை முறை மாறிச்செல்கிறது. கைத்தொலைபேசிக் கலாச்சாரம் என்பது எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுவிட்டது. குறுந்தகவல்களுடன் எழுத்து, வாசிப்பு எல்லாம் குறுக்கப்பட்டுவிட்டன.

புத்தகங்களை வாசிக்க வைப்பது பெரும் சவாலானதொரு விடயமாக உள்ளது.

இந்த நிலையில், 1978ஆம் ஆண்டு முதல் இந்த நூல்களுடன் நூலகவியலாளர் என்.செல்வராஜா பயணித்து வருகிறார்.

1978-1979 : இராமநாதன் பெண்கள் கல்லூரி.

1979-1980 : சர்வோதயம் அமைப்பு யாழ்ப்பாணம்.

1980-1981 : இலங்கை உள்ளூராட்சித் திணைக்களம் - திருகோணமலை.

1981-1982 : ஐ.நா சபையின் கிராமிய பொதுநூலக அபிவிருத்திப்பிரதிநிதி- இந்தோனேசியா.

1982-1983 : சர்வோதயம் யாழ்ப்பாணம்.

1983-1989 : இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவன ஆய்வு நூலகப்பொறுப்பாளர் - திருநெல்வேலி.

1985-1991 : நூலகவியல் காலாண்டிதழின் ஆசிரியர்.

1990-1992 : இனத்துவக்கல்விக்கான சர்வதேசநிலையத்தின் ஆய்வு நூலகப்பொறுப்பாளர்- கொழும்பு.(நிறுவனர்-இயக்குநர் நீலன் திருச்செல்வம்)

இதே காலகட்டத்தில், கொழும்பு தமிழ்ச்சங்கம், இந்து சமய விவகார அமைச்சு என்பனவற்றின் நூலகப்புனரமைப்புப்பணிகள்.

1992இல் பிரித்தானியாவுக்குப்புலம்பெயர்ந்தார்.

1992இல் றோயல் மெயிலில் அதிகாரியாகப்பணிக்கமர்ந்தார்.

1992-1997 : தமிழர் தகவல் ஆவணக்காப்பக இயக்குநர்-லண்டன்.

1997 முதல் நூல்தேட்டம் ஆசிரியர்.

2024 வரை 17 தொகுதிகளாக நூல்தேட்டம் வெளியிட்டுள்ளார். இந்த ஆண்டு 18ஆவது தொகுதி தயாராகிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்களின் விபரங்கள். இந்த நூல்தேட்டத்துக்காக தன்னலமற்ற பணியை ஆற்றிவருகிறார். எழுத்தாளர்கள்,படைப்பாளர்கள் என மிகச்சிலரே தமது நூல்களின் பதிவுக்காக இவருக்கு நூல்களை அனுப்பி வைப்பார்கள். அதிகமான நூல்கள் இவரால் தேடி எடுத்துப்பதிவு செய்யப்பட்டவை.

இவர் எந்த நாட்டுக்குச்சென்றாலும் நூல்களுடன் தொடர்புபட்டவர்கள், நூல்களை வாசிப்பவர்கள், நூலகங்கள், புத்தகசலைகள் என்றே நேரத்தைச் செலவிடுவார். பரிஸ் நகரத்துக்குப்

பலமுறை சென்று திரும்பியுள்ளார். பரிஸில் ஈபிள் கோபுரத்தில் ஏறியிருப்பாரா? பார்த்திருப்பாரா? என்பதில் சந்தேகம் உண்டு. பரிஸில் இவர் புத்தக நிலையங்களிலேயே நேரத்தைச் செலவிடுவதை நேரடியாகக் கண்டுள்ளேன். அறிவாலயம் புத்தகநிலையம், சிறிபாரதி புத்தக நிலையம் என்பவற்றில் இருக்கும் நூல்களைத் தேடி பதிவு செய்து கொண்டிருப்பார். பரிஸில் இவரது நண்பர் அசோக் அவர்கள் தான் வழிகாட்டி. அவரும் நிறைய ஈழத்துப்படைப்பாளிகளின் நூல்கள் வைத்திருக்கிறார். அவற்றைப்பதிவு செய்து கொள்வார். நாடுகள் பலவற்றுக்கும் சென்றுவரும் என்.செல்வராஜா அவர்கள் அங்குள்ள சுற்றுலாத்தலங்களுக்குச் சென்றுவருவதை அவதானிக்க முடியவில்லை. அவர் நாளும் பொழுதும் நூல்களுடனேயே பயணிக்கின்றார்.

நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களுடனான தொடர்பாடல் 2002ஆம் ஆண்டு ஐபிசி தமிழ் வானொலி வழியாகவே ஏற்பட்டது. வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைவேளையில் நடைபெற்று வந்த காலைக்கலசம் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக அமைந்த நூல்தேட்டம் நிகழ்ச்சியை 2009ஆம் ஆண்டுவரை வழங்கி வந்தார். நூல்கள், எழுத்தாளர்கள் பற்றிய விபரங்களை நிகழ்ச்சியில் உள்ளடக்கிக்கொள்வார். வானொலியில் நிகழ்ச்சியைக்கேட்டுப் பலர் பயன்பெற்றனர்.

2024 வரை 17 தொகுதிகளாக நூல்தேட்டத்தைப் பதிப்பித்துள்ளார். 17000 நூல்களின் விபரங்களைப் பதிவு செய்துள்ளார். 1991ஆம் ஆண்டு முதல் யாழ்.பொதுசன நூலக ஆலோசனைக்குழுவில் அங்கம் வகித்து வரும் என்.செல்வராஜா அவர்கள் ஐரோப்பியத் தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும் என ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது அவரது நீண்டகாலக் கனவாக இருந்து வருகிறது.

இலண்டனைத் தளமாகக் கொண்ட தேசம், லண்டன் புதினம், கனடா - தமிழர் தகவல், கனடா-தாய்வீடு, யாழ்ப்பாணம்-எழுநா ஆகியவற்றிலும், கொழும்பிலிருந்து வெளிவரும் வீரகேசரி பத்திரிகையிலும் வாரம் தோறும் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்.

இதுவரையில் 70 நூல்களை எழுதி வெளியிட்டுள்ள நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் நூலகசேவை, எழுத்துப்பணி, வெளியீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில்,ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வம் அவர்களை முதன்மை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கனடா தமிழர் தகவல் சஞ்சிகை 2005ஆம் ஆண்டு, விமல் சொக்கநாதன் அவர்கள், தினகரன் பிரதம ஆசிரியர் இ.சிவகுருநாதன் நினைவாக வழங்கிய தங்கப்பதக்கம் அணிவித்து மாண்பேற்றப்பட்டார்.

2005ஆம் ஆண்டு கண்டி சிந்தனைவட்டம் ‘எழுத்தியல் வித்தகர்’ எனப்பட்டம் வழங்கி மதிப்பளித்தது.

2007ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் சேவை நலன் பாராட்டு விருது வழங்கியது.

2007ஆம் ஆண்டு சிவரஞ்ஜித் அவர்கள் ஐபிசி தமிழ் வானொலியின் பணிப்பாளராகத் திகழ்ந்த பொழுது நடைபெற்ற 10ஆவது ஆண்டுவிழாவில் பணி மதிப்பளிப்பு விருது வழங்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ‘தமிழியல் விருது’ வழங்கியது.

2013ஆம் ஆண்டு லண்டனில் தமிழினி குலேந்திரன் ‘வாழும் பொழுது வாழ்த்தும் விருது’ வழங்கினார்.

2017ஆம் ஆண்டு London IPRA பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட நூலக சேவையாளர்களுக்கு விருது வழங்கியது. அதில் செல்வராஜா அவர்களும் விருது பெற்றார்.

2018ஆம் ஆண்டு இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வவுனியூர் ‘இரா உதயணன் இலக்கியவிருது’ வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

2019ஆம் ஆண்டு ஜேர்மனியில் இயங்கும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு நற்பணி மன்றம் ‘தொண்டர் திரு முரசு’ விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

2023ஆம் ஆண்டு கனடாவில் தளம் கொண்டுள்ள வென்மேரி அறக்கட்டளை, பரிஸில் நடத்திய விழாவில் ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

நூல்களுடன் வாழ்ந்து வரும் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் அகவை 70ஐ அடைந்திருக்கும் இவ்வேளையில், அவர் இத்துறையில் பெற்ற பாராட்டுக்களையும் விருதுகளையும் நினைவூட்டி அவருக்கு அகவைத்திருநாள் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

**எஸ்.கே.ராஜென்**




அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டத்தாபனம்-தமிழ் 1997-2007
பத்தாவது ஆண்டு நினைவின்போது 9.6.2007 அன்று
பணி மதிப்பளிப்பு விருது வழங்கப்பட்டது.

# நூல்தேடும் நூலகன்



உள்நாட்டு யுத்தத்தால் நாட்டை விட்டே
உலகெங்குஞ் சிதறிவாழும் எம்மி னோரில்
எள்ளளவே யாகுமாம் பிறந்த மண்ணை
இதயத்துட் தாங்கித்தம் வாழ்நா ளெல்லாம்
கள்ளமின்றிக் கருத்தினிலே கொண்டு ஆழிக்
கடல்கடந்தும் நேசிப்போர் அன்னா ருள்ளே
வெள்ளைமன நடராஜா செல்வ ராஜா
வரலாற்றில் பதம்பதித்து வாழும் நேசன்

யாழ்ப்பாண மாவட்டம் ஆனைக் கோட்டை
எனுமீழத் திருப்பதியில் பிறந்த ஞானன்
தோள்தாங்கிச் செய்கின்ற தொண்டோ யாருஞ்
செய்யவொண்ணாப் பெரும்பணியாம் சொந்த மண்ணில்
வாழ்பவரும் வெளியகன்றோர் தாமும் தம்மின்
வாழ்நாளில் செய்யுகின்ற தமிழின் தொண்டை
நீள்நெடுநாள் கடந்திடினும் நானி லத்தில்
நிலைத்திருக்கப் பதிகின்றார் நிலைத்தி ருப்பார்

அறிந்தவரென் றில்லையவர் அறியா தோரும்
ஆவியைவிட் டிவ்வுலகைத் தவிர்த்த பேரும்
நிறைவுறவே செய்திட்ட நூற்ப டைப்பை

*நாடியிடந் தேடியடைந் தியன்ற மட்டும்*
*நெறிமுறைகென் றேற்றபடி வடிவ மைத்து*
*நூல்தேட்டம் என்னுந்றன் வலைத்த ளத்தில்*
*முறையாகப் பதிவுதனைச் செய்யு கின்றார்*
*முற்றுந்தன் தேட்டத்தில் மதிகொள் வோர்க்கே*

*யார்யார்யார் எந்நூலைப் படைத்தா ரென்றும்*
*எவ்வகுப்பைச் சேர்ந்தததாம் எக்கா லத்தில்*
*பார்வையினுக் குட்பட்ட தான தென்றும்*
*பற்பலவாம் தகவலெல்லாம் புடம்போட் டாற்போற்*
*சீராகக் கோத்தெடுத்துத் தேடு வோர்தம்*
*சிரமத்தைத் தவிர்த்துள்ள செய்கை தன்னை*
*ஓர்ந்திடிலோ அம்மம்ம ஒப்பில் லாத*
*ஒன்றாகும் காரியமாம் ஓது தற்கே !*

*பிறந்தகத்துத் தொகுப்புகளாய் மட்டு மன்றிப்*
*பிறதேசங் கடந்துமவர் தமிழ்த்தொண் டாக*
*அறியாதோர் அறியவென மலேயா சிங்கை*
*ஆகியதாம் நாடுகளின் படைப்பைக் கூட*
*நிறைவாகத் தொகுத்துள்ளார் நிலைபெற் றோங்க*
*நற்றமிழின் நன்றிக்குத் தக்கோ ராகும்*
*துறைசார்ந்த செயற்பாட்டில் வெற்றி கண்டார்*
*தேகநலம் பெற்றுநீடு வாழ்க வாழி!*

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**
(இலங்கை)

# எனக்குள் எழுந்த எண்ணங்களின் செல்திசையை சீரமைத்த நூலியலாளர்



நூலியலாளர் என் செல்வராஜா அவர்களுக்கும் எனக்குமிடையில் எந்தவித முன்னறிமுகமும் இன்றி புத்தகங்களால் ஏற்பட்ட தொடர்பு இன்று மிகவும் நெருக்கமாக உரையாடக்கூடிய நட்பாக மலர்ந்துநிற்கிறது.

புத்தகங்களைப் பற்றி அவரோடு பேசும்போது நேரம் போவதே தெரியாது, எவ்வாறான கேள்விக்கும் அவரிடம் விடையிருக்கும். மேலும் மேலும் பல புதிய தகவல்களையும் கூறுவார். காலஓட்டத்தில் புத்தகங்கள் சார்ந்து ஏற்படக்கூடிய அனைத்து புதிய விடயங்களையும், தொழில்நுட்ப முன்னேற்றங்களையும் அவர் அறிந்துவைத்திருப்பது என்னை எப்போதுமே வியப்பில் ஆழ்த்தும். அதேநேரம் ஒரு ஆபத்தும் அதிலுள்ளது, அவரைப்போல நாங்களும் அந்த புதிய விடயங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பார்.

எடுத்த கருமத்தை குறித்த நேரத்துக்குள் முடிப்பதில் அவருக்கு இணை அவரே, எங்களையும் அவ்வாறு இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பார், விருப்பம் இருந்தாலும் அவரளவுக்கு என்னால் இருக்கமுடிவதில்லை என்பதே உண்மை.

ஈழத்து பதிப்பிலக்கியத்துறைக்கு இவர் ஆற்றிவரும் பணி போதியளவில் எம்மவர்களிடையே அறியப்படவில்லை என்ற ஆதங்கம் எனக்குள்ளது. மற்றவர்களை குறைகூறும், மற்றவர்கள் செய்வார்கள் என்று வாழாதிருக்கும் எம் சமூகத்தில் யாருக்காகவும் காத்திராமல் காலத்தின் தேவையறிந்து, 'நூல்தேட்டம்' என்ற ஈழத்து நூல்களின் விபரங்களை பட்டியலிட்டு, இன்று 17000 புத்தகங்களின்

பட்டியலை பூர்த்திசெய்து புத்தகங்களாக அச்சிட்டு வெளியிட்டிருக்கும் இவரது பணியை, அவர் 70 வயதை எய்தும் இத்தருணத்திலாவது வாழ்த்தி வணங்குவோம்.

சிலர் என்னை கேட்டதுண்டு, ''செல்வராஜா கறாரான பேர்வழி ஆச்சே, எப்படி உம்மால் அவரோடு தொடர்ந்தும் பயணிக்க முடிகிறது?'', ஆம் அவர் கறாரானவர் தான், அந்தக் கறாருக்குள் இருக்கும் கனிவு அவரோடு சேர்ந்து பயணித்தால் மட்டுமே புரியும்.

அவரது நட்பு கிடைத்ததும், என்னை அவர் மதித்து பல்வேறு விடயங்களையும் என்னோடு பகிர்ந்துகொள்வதும் நான் செய்த பாக்கியம்.

'எங்கட புத்தகங்கள்' என்ற எண்ணக்கரு என்மனதில் உதித்தபோது என் செல்வராஜா அவர்களை நானறியேன், ஆனால் 'எங்கட புத்தகங்கள்' என்ற பெயரின்கீழ் நான் முன்னெடுத்த பணிகளை தனது இளமைக்காலத்தில் செய்தவர் என்று தெரிந்துகொண்டபோது எங்களுக்கிடையிலான உறவு நெருக்கமானது. இன்று 70 வயதை



காணும் நூலியலாளரே எனக்குள் எழுந்த எண்ணங்களின் செல்திசையை சீரமைத்தவர், எங்கட புத்தகங்களின் இன்றைய நிலைக்கான வழிகாட்டி. இன்னும் பல ஆண்டு அவர் ஆரோக்கியமாகவும் மகிழ்வுடனும் வாழவேண்டும் என்று அவரை வாழ்த்தி நிற்கிறேன்.

நன்றி

**குலசிங்கம் வசீகரன்**
எங்கட புத்தகங்கள்



18.07.2023 அன்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மட்டக்களப்பில் ‘பொலிவுபெறும் பொதுசன நூலகம்’, ‘யாழ்ப்பாணப் பொது நுலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு’, 'Rising from the Ashes' ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வின் போது, திரு.சற்குணம் சத்தியதேவன், திரு. குலசிங்கம் வசீகரன் ஆகியோருடன்.

## என்.செல்வராஜாவின் பெருமனதை பெருமைசெய்ய விரும்பும் வாழ்த்து இது



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எனது 6 புத்தகங்களின் அறிமுக விழாவில் முதல் முறையாக செல்வராஜா அவர்களை நேரில் கண்டேன். எங்கட புத்தகங்கள் குலசிங்கம் வசீகரன் அவர்கள்தான் அறிமுகப்படுத்தினார். அதற்கு முன்னரே அவரின் பெயரை அறிந்திருக்கிறேன். புத்தகங்களின் அரசர் என்பதுபோன்ற ஒரு மனப்பதிவு எப்படி எனக்குள் முளைத்திருந்ததோ தெரியவில்லை. பழமைக்கும் புதுமைக்கும் கிடைத்த பொக்கிசம் போன்று என் மனதில் இருந்துகொண்டிருந்தார்.

அடம்பன், மன்னாரில் ஆற்றல் நுண்கலைக் கல்லூரியை நான் நிறுவியபோது எங்கட புத்தகங்கள் குலசிங்கம் வசீகரன் அவர்கள் கல்லூரி நூலகத்திற்காக ஒரு தொகுதி புத்தகங்கள் கிடைக்கச் செய்திருந்தார். அன்பளித்த பெட்டிகளில் ஒட்டியிருந்த பெயர் Books Abroad. ஆம் அந்த நிறுவனத்தில் இருந்து சிறுவர்களுக்கான ஆங்கில நூல்களை ஆயிரக்கணக்காகப் பெற்று இங்கே நம்மூர்களில் உள்ள பாடசாலைகளுக்கும் நூலகங்களுக்கும் கிடைக்கச் செய்தவர் என்.செல்வராஜா அவர்கள்.

தனது மகளின் மகவை கைளிலும் மடியிலும் தாங்கித்தாங்கி ரசித்துக்கொண்டிருந்த பொழுதொன்றில் அவரை அவரது வீட்டில்

லண்டனில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சந்திப்புக்கும் தூண்டுதலைத் தந்தவர் வசீகரன் தான். லண்டனில் இலக்கியச் செயற்பாட்டில் அதிகம் அறியப்பட்டவராகிய பா.நடேசன் அவர்கள் அழைத்துச் சென்றிருந்தார். எங்கள் மூவரின் கலந்துரையாடலில் அவரது மகள் மற்றும் இணையரும் அவ்வப்போது கலந்துகொண்டனர்.

'ஈழத்துத் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி : ஒரு நூலகவியலாளரின் பார்வை' என்ற அவரது புத்தகம் ஒன்றை கையில் எடுத்துவந்தார். ''உம்மைப்பற்றி நான் ஒரு கட்டுரை எழுதினனான் தெரியுமா'' என்றவாறு பக்கத்தில் அமர்ந்தார்.

ஒரு முன்னாள் போராளியின் முள்ளிவாய்க்கால் நினைவுகள் - முயற்சித் திருமகள் வெற்றிச்செல்வியின் படைப்பாளுமை - என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை இந்தப் புத்தகத்தில் உள்ளது என்றபடி பொருளடக்கப் பகுதியில் ஓடியது அவரது பார்வை. பக்கம் 227 இல் அதே தலைப்பு. ''முயற்சித் திருமகள்'' என்ற பெயரில் எனது வாழ்நாளில் முதலாவது விருது வழங்கி கௌரவித்தது மன்னார் தமிழ்ச்சங்கம். மன்னாரில் பத்தாண்டுகளுக்கு முன்னர் நடந்த விருதின் பெயரையே தலைப்பாகக் கொண்டு இங்கே இந்தப் புத்தகத்தில் என்னை பெருமைப்படுத்தியிருந்தார் செல்வாராஜா அவர்கள்.

''உமக்கு தெரிஞ்சிருக்காதெண்டு நினைக்கிறன். உம்மைப்பற்றி எவளவு தகவல்களை தேடி எடுத்து எழுதியிருக்கிறன் பாரும்'' என்றார். நான் பிறந்தது, போராட்டத்தில் இணைந்தது, காயமடைந்தது, ஊடகங்களில் பணியாற்றியது, வெளியிடப்பட்ட புத்தகங்களின் விபரங்கள், அப்புத்தகங்கள் பேசும் ஆழமான கருத்துகள் என என்னையும் எனது எழுத்தையும் அறிமுக உரையாக அமைத்திருந்தார். அதுவும் 2014இல் எழுதப்பட்டு 2016இல் பதிப்பாகிய புத்தகத்தில் இருந்தது. உண்மையில் மனம் நெகிழ்ச்சியில் நிறைந்தது. நீண்ட நேரம் வார்த்தைகள் ஏதுமின்றி அமைதியாக இருந்தேன்.

''இந்தப் புத்தகம் உமக்குத்தான். வாரும் இன்னொரு மகிழ்ச்சியான காட்சியை காட்டுகிறேன்'' என்றவாறு மாடிப்படிகளில் ஏறினார்.

வீட்டு மாடி அறைகள் முழுவதும் புத்தக இராக்கைகளும் ஆவணப் பெட்டிகளும். நூலகவியலாளர் அல்லவா? நூலக முறைப்படியாக இலகுவில் புத்தகங்களை எடுக்கும் முறைப்படியாக அந்தப் புத்தகக் களஞ்சியம் அமைந்திருந்தது. பதிவின் படியாக இலக்கத்தைப் பார்த்து, ஒரு பெட்டியைத் திறந்தார். அங்கே எனது சில புத்தகங்கள். இதைவிட ஒருவரை வேறெப்படி பெருமைப்படுத்த முடியும்!

தன் கடின உழைப்பாலும், மிகச்சிறந்த சேவையாலும் நூலகவியலை துணையாகக் கொண்டு என்.செல்வராஜா அவர்கள் படைத்திருக்கும் புத்தகப் படிக்கட்டுகள் மிகவும் உயரமானவை. அந்தப் படிக்கட்டுகளில் ஏறிப்பார்க்கும்போது இலக்கிய உலகின் பலநூறு முகங்களை முழுமையாகக் காணலாம். கூடவே வாழ்வியலையும் வரலாற்றையும் அறியலாம்.

**வெற்றிச்செல்வி**

எழுத்தாளர்





# ஈழத்தமிழ் சமூகத்தின் சிறந்த மற்றும் ஒரே ஒரு நூலகவியலாளர்

**த**மிழ் சமூகத்தில் நூலகவியல் சார்ந்து செயற்படுகின்றவர்கள் இருக்கிறார்கள். பதிப்பு மற்றும் வெளியீடு சார்ந்து இயங்குகின்ற துறைசார் நிபுணர்கள் உள்ளார்கள். கிராமிய நூலகங்கள் அமைத்தல் வாசிப்பினைப் பரவலாக்கல் போன்றவற்றை செய்கின்றவர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவருமே மேற்குறித்த விடயங்களில் தனியே ஒரு விடயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அதில் புலமையாளர்களாவும் ஆளுமையாளர்களாவுமே சிறப்புடையவர்கள். இந்த இடத்தில் திரு.என்.செல்வராஜா அவர்களை இவர்களிலிருந்து தனித்துவமானவர் என்று சொல்வது அல்லாமல் வேறு எச்சொற்களைக் கொண்டு நிரப்ப முடியும்?

1. நூலகராகவும், நூலகவியல் புலமையாளராகவும், நூலகங்கள் என்கிற கருத்தாக்கம், பட்டியலாக்கம் ஆகியவற்றிற்கான அவரது பங்களிப்பும், சிந்தனைகளும்.

2. பதிப்பு மற்றும் வெளியீடு சார் தொழினுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் அவரது ஆலோசனையும் வழிகாட்டல்களும், குறிப்பாக ஈழத்தமிழ்ச் சூழலில் அவற்றிலுள்ள சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள் குறித்த சிந்தனைகள்.

3. இந்திய மேலாண்மையால் ஈழத்துப் பதிப்புச்சூழல் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்.

4. வாசிப்பினைப் பரவலாக்குதல் மற்றும் கிராமிய நூலகங்கள் என்பதை ஒரு செயற்பாடாக்குதல்,

5. புலம்பெயர் புதிய தலைமுறையினரிடம் எமது பண்பாட்டையும் விழுமியங்களையும் பரிமாறிக்கொள்ளல்,
6. புத்தகவரலாறு,
7. நூலக வரலாறு
8. ஆவணக்காப்பகம்,
9. 'புக்ஸ் அப்ரோட்' நிறுவனத்தினுடனான தொடர்பும் அதனூடாக இலங்கை முழுவதற்கும் அதன் பயனை சென்றடையச் செய்கின்றமை.
10. நூல்தேட்டம் தொகுதிகள்,
11. 70இற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்
12. அயோத்தி நூலக சேவைகள், நூலகவியல் சஞ்சிகையின் பதிப்பாசிரியர்
13. எங்கட புத்தகங்கள் இதழின் ஆசிரியர்களில் ஒருவர்
14. தேசிய மற்றும் பிராந்திய நூலகங்கள் பற்றிய கருத்துருவாக்கம் மற்றும் சிந்தனைகள்
15. நடைமுறையில் பிராந்திய நூலகமாக உருவாகிவரும் மட்டக்களப்பு பொது நூலகத்தின் தலைமை ஆலோசகர்

என நூலுலகின் பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்ச்சியாக எழுதியும் உரையாடியும் செயற்பட்டும் வருகின்ற அவரை ஒற்றைச் சொல்லுக்குள் அடக்கி அடையாளப்படுத்த முடியாது. எனினும் இவை அனைத்தையும் பரந்த விரிந்த பொருளில் சுட்டும் சொல்லாக இருக்கின்றமையாலேயே அவரை 'நூலியலாளர்' எனக் குறிக்கிறேன்.

நூலியலாளர் திரு.என் செல்வராஜா சமகாலத்தின் ஈழத்தமிழ் சமூகத்தின் சிறந்த மற்றும் ஒரே ஒரு நூலியலாளராவார். அவரது முன்னைய பல விடயங்கள் போலவே இதுவும் தமிழ்ச் சூழலில் முன்னோடி முயற்சியாகும். புத்தகம், வாசிப்பு என்பதை கவிதை மற்றும் புனைகதைகளுக்குள் மட்டுமே அடக்கி வைத்திருக்கின்ற, தமது

அல்லது தமக்கு பயன் தரக்கூடியவை தவிர்ந்த ஏனையவற்றையும் நூல் உலகு சார்ந்து செயற்படுகின்ற விடயங்கள் குறித்து அக்கறைப்படாத எழுத்தை தவமாய் மேற்கொள்பவர்களும் வரகவிகளும் கோலோச்சும் ஈழத் தமிழ் புத்தக உலகில் என். செல்வராஜாவின் பணிகளின் தாக்கமும் தொலைநோக்கும் குறித்து சரிவர அறிந்து கொள்ளாமலே இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை தொடர்வதில் ஆச்சரியப்படுவதில் அர்த்தமில்லை.

நூல்தேட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் அமைப்புரீதியாக / நிறுவனரீதியாக செய்யப்படவேண்டிய பெரிய வேலைத்திட்டங்கள். ஆனால் நூல் தேட்டம் என்பது செல்வராஜா என்கிற தனி ஒருவரால் முன்னெடுக்கப்படுகின்ற மிகப் பிரமாண்டமான வேலைத்திட்டம். இங்கே பிரமாண்டம் என்ற சொல் மிகவும் பிரக்ஞைபூர்வமாகவே கையாளப்படுகிறது, ஏனென்றால் பிரமாண்டத்தை பிரமாண்டம் என்றுதான் சொல்லமுடியும். அதன் 17 தொகுதிகளில் கிட்டத்தட்ட 17000 ஈழத்துநூல்கள் பட்டியலாக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை குறித்த சுருக்கமான அறிமுகங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான ஒரு புலமைச் சொத்து அனைவரிடமும், குறிப்பாக அந்தத் துறைகள் குறித்துச் செயற்படுபவர்களிடம் போய்ச்சேரவேண்டும் என்கிற அக்கறையுடன், அந்தத் தொகுதிகளை வாங்க விரும்புவோருக்கு இருக்கக் கூடிய பொருளாதாரச் சுமைகள், வசதியீனங்கள் பற்றியும் அக்கறைகொண்டவராகவும் அவர் இருக்கின்றதனாலேயே அவற்றை இலவசமாக இணையப் பயன்பாட்டிற்கு அளித்துள்ளார் என்பதை மிகவும் குறிப்பாக நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நூலகர் என்பவர் அலுவலக உதவியாளர்கள் என்பதற்கு சமமானவர்கள் என்று கருதப்பட்டுவருகின்ற நிர்வாக மற்றும் பொதுப்புத்தியில் பதிந்து போனதை மாற்றிய தொடர் செயற்பாட்டுப் புரட்சியாளரான நூலகர் அவர் என்பதுடன் சமூகம் சார் வேலைத்திட்டங்களின் முன்னுரிமையில் நூலகம் / நூலகவியல் கடைக்கோடிக்குரியது என்பதை வலுவாக எதிர்த்து அதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற நிர்வாக

அதிகாரத்திற்கு ஏவல் செய்யாத நூலகவியலாளராக இளந்தலைமுறை நூலகர்கள் நூலகவியலாளர்களுக்கு சமகால முன்னோடியாக அவர் விளங்குகிறார்.

நிறுவன கல்விதுறைசார் அறிஞர் அல்லாமல் அகில இலங்கை ரீதியில் துறைசார் புலமைத்துவ நிறுவனங்களால் அறியப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான தமிழ்ப் புலமையாளரும் தமிழ் நூலியலாளரும் திரு. என். செல்வராஜா அவர்களே.

தமிழ் இனம் மீது தளராத பற்றுக்கொண்டு தமிழ்த் தேசிய கருத்தியலில் நம்பிக்கையும் வலுவான ஆதரவும் கொண்டிருக்கின்ற அவர் அதன்வழியே தமிழ்த் தேசிய நூலகம் மற்றும் பிராந்திய தேசிய நூலகம் ஆகிய இரு கருத்துருவாக்க சிந்தனைகளை தோற்றுவித்து நடைமுறைப்படுத்த தொடர்ச்சியாக முயன்றுகொண்டிருப்பவர். குறுகிய இனவாத எல்லைக்குள் தன்னைச் சுருக்கிக்கொள்ளாத இலங்கைப் புலமையாளர்களில் ஒருவராக அவர் உள்ளமைக்கு ‘புக்ஸ் எஃப்ரோட்’ நிறுவனத்தினால் அளிக்கப்படுகின்ற இலட்சக்கணக்கான மிகச்சிறந்த பயனுடைய ஆங்கிலப் புத்தகங்களை தென்னிலங்கை நூலகங்களுக்கும் ஆர்வமுடைய கிராமிய நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கின்றமை சான்று. இத்தனைக்கும் அளிக்கப்படுகின்ற நூல்கள் சரியானவர்களிடத்தில் செல்கின்றதையும் சரியான முறையில் பயன்படுத்துவதையும் தனிப்பட்ட முறையில் அவர் அக்கறையுடன் அவதானிக்கின்றமை அவரது செயல்நேர்த்தியையும் விரிந்த மனப்பான்மையும் காட்டுகின்ற ஒன்றாகும். இதற்காக சிங்கள மக்களால் அவர் நன்றியுடன் பெரிதும் கொண்டாடப்படுகின்றவராக இருக்கின்றார்.

அதேபோன்று குறுகிய பிரதேச வாதத்தைக் கடந்தவராகவும் அவர் இருந்தமையாலேயே மட்டக்களப்பில் உருவாகிவரும் பொது நூலகம் தொடர்பில் அது உருவாகின்ற சமகாலத்திலேயே அது தொடர்பில் ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்கியதுடன் அது தொடர்பில் எழுத்துப்பூர்வமான பதிவுகளையும் சமநேரத்தில் முன்னெடுக்கின்றார். நூலகம் என்பது அனைத்துத் தரப்பினரது

வாசிப்புத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் இலகுவில் அணுகக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்ற அவரது ஆழ்ந்த வாண்மைத்துவ புலமையறிவை நடைமுறைபடுத்த கிடைத்த வாய்ப்பை அப்பிரதேசத்திற்கு முழுமையாய் வழங்கியுள்ளார்.

உருவாகிவரும் புதிய நூலகத்திற்கான நூலீட்டல் குறித்த தெளிவான பயனுறுதிமிக்க வழிகாட்டல்களை தொடக்க நிலையிலேயே வழங்கி அறிவுறுத்திய அவர் தனது முயற்சியால் பல்லாயிரக்கணக்கான நூல்களையும் அன்பளிப்பாக கிடைக்க வழிசமைத்தார். மட்டக்களப்பு பிராந்தியத்தின் சிறப்புசேர்க்கைகள் குறித்து விரிவான ஏறக்குறைய தனது வாழ்நாளில் திரட்டிய அறிவை முழுமையாக அவர் இலவசமாகப் பகிர்ந்திருந்தார். இந்நூலகத்தின் ஒவ்வொரு பகுதிக்கான கட்டிடங்களின் அமைப்புமுறை மட்டுமின்றி தளபாடங்களின் அளவு பரிமாணங்களில் கூட தனிப்பட்ட கவனத்துடன் செம்மையாக அமைவதில் கூடிய கரிசனை கொண்டு செயற்பட்டவர்.

அவ்வகையில் நூலியலாளர் திரு.என் செல்வராஜா அவர்களைப் பற்றிய பதிவுகள் முகஸ்துதிக்காகவும், துதிபாடல்களாகவும் அமைந்தவை அல்ல அவை குறுகிய சிந்தனைகளைக் கடந்து தொலைநோக்குடன் சிந்திக்கின்ற அதற்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் ஆற்றுகின்ற பணிகளால் புகழுக்கும் கௌரவத்திற்கும் உரித்தான ஈழத் தமிழ்ச் சமூகத்தின், இலங்கை நூலக சமூகத்தின் தனித்த ஆளுமைக்கான சிறு கையுறையே!

**ச.சத்யதேவன்**

# நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் நூலகம் சார்ந்த பெரும்பணிகளில் சில



இலங்கையில் தமிழ் நூலகவியல்துறையின் முன்னோடிகளுள் ஒருவராக இன்று எம்மிடையே வாழ்ந்துவரும் திரு என்.செல்வராஜா அவர்கள் தனது எழுபதாவது அகவையை காணும் இவ்வேளையில் ஈழத்துத் தமிழ் நூலகர்களின் சார்பில் அவருக்கு எனது இதயம் கலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தாயகத்திலிருந்து 1992இல் புலம்பெயர்ந்து பிரித்தானியாவுக்குச் சென்று அங்கு நிரந்தரமாக வாழநேர்ந்தாலும், இன்றுவரை தனது நூலகவியல் பணிகளை தாயகத்துக்காக இதயசுத்தியுடன் வழங்கிவரும் பெருமகன் அவர். அவர் வாழும் காலத்திலேயே நாமும் வாழ்ந்து, அவர் தன் கண்ணாகக் கருதும் ஈழத்தின் நூலகத்துறையில் நாமும் பணியாற்றி அவரது அரிய ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளக் கிடைத்த வாய்ப்பிற்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

திரு.என்.செல்வராஜா அவர்கள் பிரித்தானியாவில் உள்ள தொண்டர் அமைப்புகளுடன் தொடர்புகொண்டு ஏராளமான சிறுவர், இளையோர் மற்றும் உசாத்துணை நூல்களை 2004ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாடசாலை நூலகங்களுக்கும், பொது நூலகங்களுக்கும், சனசமூக நிலைய நூலகங்களுக்கும் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி ஸ்கொட்லாந்திலுள்ள Books Abroad நிறுவனத்தின் வாயிலாக பெற்றுக்கொடுத்து வருகின்றார்.

2004இல் உடத்தலவின்னை சிந்தனைவட்டத்தின் தாபகர் அமரர் பீ.எம்.புன்னியாமீனின் உதவியுடன் மலையகப் பகுதிகளுக்கும், குமரன் புத்தக இல்ல அதிபர் திரு.க.குமரனின் உதவியுடன் தென்னிலங்கைப் பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும் நூல்கள் இவரால் அனுப்பிவைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் பெட்டிகளிலும், பலட் (Pallet)களிலும் கப்பல் மூலம் நூல்களை அனுப்பிவைத்த திரு. செல்வராஜா, 2013ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது பாரிய கொண்டெய்னர்களில் அவற்றை தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பிவருகின்றார். இந்த நூல்களின் தரத்தையும் பணப்பெறுமதியையும் நூலகர்களான எம்மால் எளிதில் உய்த்துணர முடிகின்றது. எவ்விதமான சுயவிளம்பரங்களும் இன்றி 'மௌனமாய்ப் பொழியும் மாமழையாக' இவரது இப்பணி நடந்துகொண்டிருக்கின்றது.

2014இல் 18 பலட்களில் அனுப்பிவைக்கப்பட்ட நூல்கள் திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பத்திமூன்று பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாணப் பொதுநூலகத்திற்கும், நல்லூர் பிரதேச சபையின் மூன்று நூலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ந்து 2016, 2019, 2021, 2023ஆம் ஆண்டுகளிலும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களுக்கும் நூல்கள் கொன்டெய்னர்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கொரோணாக் காலக் கெடுபிடிகளின் மத்தியில் கூட இவரது கொண்டெய்னர்களில் ஒன்று கிளிநொச்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு 'லிட்டில் எயிட்' அமைப்பின் மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இயங்கும் பாடசாலை, பொது நூலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இவ்வகையில் 2023இல் மட்டும் இரண்டு கொண்டெய்னர்கள் அனுப்பிவைக்கப்பட்டன. அவற்றில் ஒன்று கேகாலை மாவட்டத்திற்கும், மற்றொன்று கிழக்கு மாகாணத்தில் பாரிய அளவில் உருவாகிவரும் மட்டக்களப்பு பொது நூலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் பணிகளில் பலராலும் விதந்து பேசப்படுவது அவரது 'நூல்தேட்டம்' தொகுதிகளாகும். தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற வகையில் குறிப்புரையுடன் கூடியதாக இன்றுவரை 17 தொகுதிகளில் 17000 ஈழத்துத் தமிழ் நூல்களை நூல் விபரப்பட்டியல்களாக அவர் ஆவணப்படுத்தியிருக்கிறார். தனிமனித முயற்சியாக மேற்கொள்ளப்படும் இமாலயப் பணி இதுவாகும். அவரது நூல்தேட்டப் பணி இன்றும் வீறுடன் தொடர்கின்றது. இவரது நூல்தேட்டப் பணிக்கு எம்மாலான சிறு உதவியாக, அவ்வப்போது புதிய நூல்கள் எமது நூலகத்துக்குக் கிடைக்கும்போது நாமும் அவரிடம் அதனை தெரியப்படுத்தி தேவைப்படும் தகவல்களை அவருக்கு வழங்கிவருகின்றோம். எம்மைப் போலவே கொழும்புத் தமிழ்ச் சங்கம், எங்கட புத்தகங்கள் உள்ளிட்ட வேறும் சில நூலகப் பொறுப்பாளர்களும் தனிநபர்களும் அவரது நூல்தேட்டப் பணிக்கு அவ்வப்போது உதவி வருகின்றார்கள்.

எமது நூலகவியல் கல்விக்கு தொடக்கப் புள்ளியாகவிருந்தது நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் 'நூலகவியல்' சஞ்சிகை களாகும். இன்றும்கூட நூலகவியல் துறை மாணவர்களின் முக்கிய கைந்நூலாக 'நூலகவியல்'' சஞ்சிகையே விளங்குகின்றது. 1985 செப்டம்பர் முதல் 1991வரை ஏழாண்டுகள் காலாண்டிதழாக நூலகவியல் தொடர்ந்து வெளிவந்தது. பின்னர் 2006 ஜனவரி, 2006 ஏப்ரல், 2007 ஏப்ரல் மாதங்களில் லண்டனிலிருந்து மூன்று இதழ்கள் வெளிவந்தது. 'நூலகவியல்' சஞ்சிகையின் வெளியீடு நின்று விட்டாலும் கூட பின்னாளில் 'நூலகவியல்' முழுத்தொகுப்பும் தனிநூலாக 2013இல் கொழும்பில் வெளியிடப்பட்டது. பின்னர் 2022இல் 826 பக்கங்கள் கொண்ட திருத்திய மீள்பதிப்பாகவும் இத்தொகுப்பு வெளியிடப்பட்டது.

இலங்கையில் தமிழ் நூலகவியல்துறை அறிமுகப்படுத்தப்பட்ட 1970களின் இறுதிப் பகுதியில் வெளிவந்த இத்துறைசார்ந்த தமிழ் நூல்கள் பெரும்பாலும் நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் 'அயோத்தி நூலக சேவைகள்' அமைப்பின் வெளியீடுகளாகவே இருந்துள்ளன.

நூலகவியல்துறை மாணவர்களுக்கு திரு. என்.செல்வராஜாவின் துறைசார்நூல்கள் அவற்றின் எளிமையான மொழிப்பயன்பாடு காரணமாக பலரினதும் விருப்பத்துக்குரியதாகவே இருந்துவந்துள்ளன.

நூலகத்துறைசார்ந்த நூல்களுடன் நின்றுவிடாது திரு. என்.செல்வராஜா 2024வரை 70இற்கும் அதிகமான புனைவல்லாத நூல்களை எமக்கு வழங்கியுள்ளார். இவை அனைத்தையும் நூலகம் இணையத்திலும் அனைவரும் பார்வையிடும் வகையில் மின்நூலாகவும் வழங்கியுள்ளார். யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை, வீரகேசரியின் பதிப்புலகம், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு வரலாற்று ஆவணங்களையும், பல்வேறு துறைசார்ந்த நூல் விபரப்பட்டியல்களையும் அவர் எமக்கு வழங்கியுள்ளார்.

எழுநா (யாழ்ப்பாணம்), தாய்வீடு (கனடா), வீரகேசரி ஞாயிறு இதழ் (கொழும்பு) ஆகியவை உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் இன்றும் தொடர்ந்து தனது அறிவினை பகிர்ந்துகொள்ளும் திரு என்.செல்வராஜாவின் எழுத்துப் பணி 1983இல் தொடங்கியுள்ளதை அவரது விரிவான நூல்விபரப்பட்டியல் காட்டிநிற்கின்றது. இவரது ஆக்கங்களை பிரசுரிக்காத ஊடகங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். நான் பணியாற்றும் சுன்னாகம் பொது நூலகம் பிரசுரித்துவரும் 'வெள்ளிமலை' ஆண்டிதழிலும் இவரது கட்டுரைகள் இடம்பெற்றுவருகின்றன. பரவலாக ஊடகங்களிலும், இணையதளங்களிலும் காணப்படும் கருத்துச் செறிவான இக்கட்டுரைகளை எதிர்காலத்தில் நூலுருவில் வெளிக்கொண்டுவருவது நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாக மாத்திரமன்றி, ஈழத்தின் நூலியல்துறையின் காத்திரமான வளர்ச்சிக்கு வழிகாட்டியாகவும் அமையும்.

நூலகத்துறைசார்ந்த எவ்விதமான ஐயங்களையும் எந்நேரமானாலும் மலர்ந்த முகத்துடன் எமக்குத் தீர்த்துவைக்கும் ஒரு நடமாடும் களஞ்சியமாக விளங்கும் நூலகவியலாளர் அவர்கள் எமக்கு கட்டுரைகளின் வழியாகவும், நேரிலும் வழங்கிவரும் தெளிவான

விளக்கங்களும், ஆலோசனைகளும் தனிப்பட்டவகையில் நூலகர்களான எமக்கு மிகுந்த உற்சாகத்தையும், துறைசார்ந்த புதிய முன்னெடுப்புகளின்பால் ஈடுபடுவதற்கான ஆர்வத்தையும் உந்து சக்தியையும் தருகின்றன.

பிரித்தானிய தபால்துறையில் அவரது நீண்டகால சேவையின் பின்னரான ஓய்வுநிலையிலும்கூட, நூல்தேட்டத் தொகுப்புகள், நூல் வெளியீடுகள், உலகளாவிய ஊடகங்களின் வேண்டுகோள்களை ஏற்று கட்டுரைகளை எழுதி வழங்கல் என தீவிரமாக இயங்கிவரும் அவரது அயராத இமாலய வெற்றிக்குப் பின்னால் நேரம் தவறாமை (நேர முகாமைத்துவம்) மிக முக்கிய பங்கினை ஆற்றிவருகின்றதென்பதை அவரது வாழ்வு முறையினை ஓரளவு படித்தவகையில் என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இவரது நெறிபிறழ்வா நேர்கொண்ட செயலூக்கம், அனைத்து நூலக சமூகத்தவருக்கும் ஒரு பாடமாக அமைகின்றது. அவரது நூலகத்துறைப் பயணம், 46 ஆண்டுகளைக் கடந்தும் வீரியத்துடன் மேலும் தொடரவேண்டும். எமக்கு ஒரு நீண்டகால வழிகாட்டியாக அவரது வாழ்வும் பயணமும் அமையவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ்.ஜெயலஷ்மி**
நூலகர், சுன்னாகம் பொது நூலகம்

# நூல்தேட்டம் நற்பணி தொடர வாழ்த்துகள்



நூலகவியலாளர் திரு என். செல்வராஜா அவர்களை இலங்கையில் இருந்த காலத்திலேயே நான் அறிவேன். பல தசாப்தங்களாகத் தொடரும் தொடர்பு இது. லண்டன் வந்த பிறகுதான் அவரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு முறை என்னிடம் இருந்த ஈழத்து நூல்களை வந்து பார்வையிட்டு அவற்றை எடுத்துச் சென்று பதிவு செய்து திரும்பத் தந்தார். அதிலிருந்து எமது உறவு மேலும் நெருக்கமானது. இப்படி எத்தனை இடங்களுக்கும் எத்தனை நாடுகளுக்கும் நூல்களைத் தேடி அலைந்திருப்பார் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

அடிக்கடி தொலைபேசியில் நீண்ட நேரம் நாம் பேசுவதுண்டு. சகல விடயங்களையும் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு குடும்ப நண்பராக இருந்து வருகிறார். இலங்கையில் இருந்த காலத்தில் இருந்து ஈழத்து நூல்கள் பற்றிய இவரது பணியை அறிவேன். ஈழத்தமிழரின் நூல்களை எதிர்காலத்தில் எவரும் அறிந்து கொள்ளும் வகையில் தீர்க்க தரிச னத்துடன் தனி மனிதராக இவர் ஆற்றும் பணி வேறு யாராலும் நினைத்துப் பார்க்க முடியாதது. அவருடைய அர்ப்பணிப்பும் உழைப்பும் சொல்லில் அடங்காது. விபரங்களை ஒழுங்கு செய்து, அவற்றைக் கணினியில் சேர்த்து வைத்து, நினைத்தவுடன் எடுக்கக்கூடியவாறு

எப்படிச் செய்வது என்று எனக்குப் பலதடவைகள் ஆலோசனை வழங்கியுள்ளார். இப்படியான ஆற்றலை நான் வேறு எவரிடத்திலும் காணவில்லை.

மற்றவர்களை எழுதுவதற்கும் நூல்களைப் பதிப்பிப்பதற்கும் தனது வெளிப்படையான ஆலோசனைகளை வழங்கி ஊக்கம் கொடுப்பதில் இவருக்கு நிகர் இவரே. இதனை அண்மையில் நான் வெளியிட்ட எனது ‘அரங்க கட்டுரைகள்’ நூல் ஆக்கத்தின் போது அனுபவபூர்வமாக உணர்ந்தேன். அந்த நூல் வெளியீட்டுக்கு அவரது உதவி மிகப் பெரியது. எனது எழுபதாவது வயது பூர்த்தி நேரத்தில் இப்படி ஒரு ஆவணத்தை வெளியிடலாம் என்று ஆலோசனை வழங்கியதில் இருந்து நூல் வெளிவரும் வரை அவர் செய்தது பேருதவி.

நாங்கள் லண்டனில் இருந்து கொண்டு கொழும்பில் இருந்த குமரன் பதிப்பகத்துடன் எப்படி எல்லாத் தொடர்புகளையும், குறிப்பாக ஒப்பு நோக்கும் வழிமுறைகளை எப்படி செய்வது என்றும் அறிவுரை கூறி எமக்கு நல்ல முறையில் நூல் வெளிவருவதற்குக் காரணமானவர் திரு. என். செல்வராஜா. இந்த நூலில் என்னுடைய நாடகப் பணி குறித்த நூலாசிரியர் அறிமுகத்தை எழுதியவரும் அவரே. எனது ‘யுகதர்மம்’ நாடக நூல் குறித்த அறிமுக உரையை லண்டனில் நிகழ்த்தியவர் இவர்.

திரு செல்வராஜா பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன். நிகரில்லா இவரது பணியை மேன்மேலும் தமிழ் சமூகம் வேண்டி நிற்கிறது. இவரது நற்பணி பல்லாண்டு காலம் தொடர எனது இதயபூர்வமான வாழ்த்துகள்.

**க. பாலேந்திரா**
அவைக்காற்று கலைக் கழகம்
லண்டன்

## தகைசால் நூலகர்

### நூலகவியலாளர் என்.செல்வராஜா சேவை நயப்பு மலர்

தாயகத்திலிருந்து 1992இல் புலம்பெயர்ந்து பிரித்தானியாவுக்குச் சென்று அங்கு நிரந்தரமாக வாழநேர்ந்தாலும், இன்றுவரை தனது நூலகவியல் பணிகளை தாயகத்துக்காக இதயசுத்தியுடன் வழங்கிவரும் பெருமகன் திரு.என்.செல்வராஜா அவர்கள்....

இவர் பிரித்தானியாவில் உள்ள தொண்டர் அமைப்புகளுடன் தொடர்புகொண்டு ஏராளமான சிறுவர், இளையோர் மற்றும் உசாத்துணை நூல்களை 2004ஆம் ஆண்டிலிருந்து இலங்கைப் பாடசாலை நூலகங்களுக்கும், பொது நூலகங்களுக்கும், சனசமூக நிலைய நூலகங்களுக்கும் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி ஸ்கொட்லாந்திலுள்ள Books Abroad நிறுவனத்தின் வாயிலாகப் பெற்றுக்கொடுத்து வருகின்றார்....

இவரின் பணிகளில் பலராலும் விதந்து பேசப்படுவது அவரது ‘நூல்தேட்டம்’ தொகுதிகளாகும். தொகுதிக்கு 1000 நூற் குறிப்புரையுடன் கூடியதாக இன்றுவரை 17 தொகுதிகளில் 17000 ஈழத்துத் தமிழ் நூல்களை நூல் விபரப்பட்டியல்களாக இவர் ஆவணப்படுத்தியிருக்கிறார். தனிமனித முயற்சியாக மேற்கொள்ளப்படும் இமாலயப் பணி இதுவாகும்....

எமது நூலகவியல் கல்விக்கு தொடக்கப் புள்ளியாகவிருந்தது நூலகவியலாளர் என்.செல்வராஜாவின் ‘நூலகவியல்’ சஞ்சிகையாகும். இன்றும்கூட நூலகவியல் துறை மாணவர்களின் முக்கிய கைந்நூலாக ‘நூலகவியல்’ சஞ்சிகையே விளங்குகின்றது....

நூலகத்துறைசார்ந்த நூல்களுடன் நின்றுவிடாது, திரு. என்.செல்வராஜா 2024வரை 70இற்கும் அதிகமான புனைவல்லாத நூல்களையும் எமக்கு வழங்கியுள்ளார்....

‘எழுநா’ (யாழ்ப்பாணம்), ‘தாய்வீடு’ (கனடா), ‘வீரகேசரி’ ஞாயிறு இதழ் (கொழும்பு) ஆகியவை உள்ளிட்ட பல்வேறு இதழ்களிலும் இணையத் தளங்களிலும் இன்றும் தொடர்ந்து தனது அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் திரு என்.செல்வராஜாவின் எழுத்துப் பணி 1983இல் தொடங்கியது....

நூலகத்துறைசார்ந்த எவ்விதமான ஐயங்களையும் எந்நேரமானாலும் மலர்ந்த முகத்துடன் எமக்குத் தீர்த்துவைக்கும் ஒரு நடமாடும் களஞ்சியமாக விளங்கும் இவரது நெறிபிறழா நேர்கொண்ட செயலூக்கம், அனைத்து நூலகச் சமூகத்தவருக்கும் ஒரு பாடமாக அமைகின்றது....

- எஸ்.ஜெயலஷ்மி

நூலகர், சுன்னாகம் பொது நூலகம்

குமரன் புத்தக இல்லம்
#1055
ISBN 978-624-6164-95-9
Rs.900
விடயம்: ஆளுமைகள்